# பகுதி – 4

# 1.1 ராஜீவ் காந்தி

> ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த ஆண்டுகளை அனுதாபத்துடன் புரிந்து கொண்டு மதிப்பிட வேண்டும்.
>
> – பி.ஜி. தேஷ்முக்

## வாழ்க்கைக் குறிப்பு

ராஜீவ் காந்தி 1944 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி இந்திரா காந்திக்கும் பெராஸ் காந்திக்கும் அலகாபாத் ஆனந்த் பவனில் முதல் மகனாகப் பிறந்தார். அக்குழந்தைக்குப் பாட்டி கமலா மற்றும் தாத்தா ஜவஹரை நினைவுபடுத்தும் வகையில் ராஜீவ் ரத்னா என்று பெயர் சூட்டப்பட்டது. ராஜீவ் தனது 12 வது வயதில் டேராடூனில் உள்ள 'டூன் பள்ளி' (Doon School)யில் சேர்க்கப்பட்டார் (1955). டூன் பள்ளியில் படிப்பை முடித்த ராஜீவ் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் மோட்டார் தொழிற்கல்வி (Automobile Engineering) பயின்றார். அங்கு மாணவராக இருந்தபோதுதான் ராஜீவ் இத்தாலிய மாணவி சோனியா (Sonia)வைக் காதலித்தார்.

ராஜீவ் காந்தி இந்தியா திரும்பியவுடன் விமானம் ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று இந்தியன் ஏர்லைன்சில் விமான ஓட்டியாக வேலையில் சேர்ந்தார். 1968 பிப்ரவரி 25–ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை பெற்றோரின் சம்மதத்தோடு சோனியாவைத் திருமணம் செய்து கொண்டார். சலனமற்றத் தெளிந்த நீரோடையாகச் சென்று கொண்டிருந்த ராஜீவ்–சோனியா வாழ்க்கையில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. 1980 ஜூன் 23 ஆம் தேதி ராஜீவின் இளைய சகோதரர் சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்தார். "ஒரு நேரு–காந்தி" தன் அருகில் இருக்க வேண்டியதன் தேவையை உணர்ந்த இந்திரா காந்தியின் விருப்பத்துக்கேற்ப ராஜீவ் தனது விமானி வேலையை ராஜினாமா செய்தார். சூழ்நிலைக் கட்டாயத்தால் ராஜீவ் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார் (1981 ஜூன்) ராஜீவ் காந்தி 1981 இல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகி 1983 இல் காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகப் பதவி உயர்வு பெற்றார். 1983 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் ராஜீவ் காந்தி நாட்டின் வருங்காலத் தலைவராக அறிமுகப்படுத்தப்பட்டார். 1984 அக்டோபர் 31 ஆம் தேதி இந்திரா காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதால் குடியரசுத் தலைவர் மரபை மீறி ராஜீவ் காந்தியைப் பிரதமராக நியமித்தார். இந்திரா காந்தி இறந்த அன்று மாலையே ராஜீவ் காந்தி பிரதமராக்கப்பட்டார் என்று விரிவாகக் கூறியுள்ளார் பி.சி. அலெக்சாண்டர்.

## சாதனைகள்

### *சீக்கியர் எதிர்ப்புக் கலவரங்கள் (Anti-Sikha Riots)*

1981 – 84ல் வட இந்தியாவில் மதவாதம் கொதி நிலையில் இருந்த போது பிரதமர் இந்திரா காந்தி இரண்டு சீக்கியப் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் (1984, அக்டோபர் 31). இக்கொடூரக் கொலை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தலைநகர் டெல்லியில் சீக்கியர்களுக்கு எதிரான கலவரங்கள் காட்டுத் தீ போல் பரவியது. சீக்கியர் குடும்பங்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டன; கடைகளும், கிடங்குகளும் சூறையாடப்பட்டன; தீக்கிரையாக்கப்பட்டன; வாகனங்கள் கொளுத்தப்பட்டன. சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். நான்கு நாட்கள் நீடித்த இக்கலவரங்களில் 3,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் உயிரிழந்தனர்; 25,000க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் வீடிழந்து அகதிகளாயினர்! இந்த இனக் கலவரம் திட்டமிட்ட செயலா? அல்லது தற்செயல் நிகழ்வா? இக்கலவரத்தில் காங்கிரசாரின் பங்கு என்ன? சமூக விரோத சக்திகளின் பங்கு என்ன?

இந்திரா காந்தியின் உடல் எரிந்து கொண்டிருந்த போது டெல்லியில் சீக்கியர் வாழ் பகுதிகள் எரிந்து சாம்பலாயின. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. புதிதாகப் பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி இராணுவத்தின் துணை கொண்டு இனக் கலவரத்தை முடிவுக்குக் கொண்டு வந்தார். இரண்டு சீக்கியப் பாதுகாவலர்கள் இந்திரா காந்தியை கொன்றதற்காக அவர்கள் சார்ந்த சமுதாயமே தண்டிக்கப்பட்டது! இக்கலவரங்களை இந்திரா காங்கிரஸ்காரர்களே தூண்டிவிட்டுப் பங்கேற்றிருக்க வேண்டும் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால் விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. தாயைப் பறிகொடுத்த சோகத்தில் இருந்த பிரதமர் வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டார்: "இந்திரா காந்தி இறந்து விட்டார்; இந்தியா வாழ்ந்து கொண்டிருக்கிறது".

### நம்பிக்கை நட்சத்திரம்

ராஜீவ் காந்தி நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தார் அவர் இந்தியாவின் 'எதிர்பார்ப்பு சகாப்த' (Era of Expectation) த்தைத்தோற்றுவித்தார். இந்தியா தடைகளைத்தாண்டி 21 ஆம் நூாற்றாண்டுக்குள் பெருமையுடன் நுழைய வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தார். உயரத்தாண்டி அடுத்த நூற்றாண்டுக்குள் குதிக்க வேண்டும் என்றார். மக்களின் உள்ளங்களில் நம்பிக்கை அலைகள் அடுக்கடுக்காக எழுந்தன. புதிய ஆட்சி புதிய புரட்சிப் பாதையைப் போட்டுக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பாரிடையேயும் எழுந்தது. நேரு 'சோஷலிச சமுதாயம்' அமைப்பதற்காகப் பாடுபட்டார். இந்திரா காந்தி வறுமையை ஒழிப்போம் என்று சூளுரைத்தார். ராஜீவ் காந்தி 'தொழிநுட்ப ஜனநாயக' த்தை ஏற்படுத்த உறுதி பூண்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தி 'கொள்கைப் பிரகடனம்' எதையும் செய்யவில்லை. எனினும் அவரது பேச்சுக்களிலிருந்தும், பேட்டிகளிலிருந்தும் பின்வரும் **கொள்கைக் கூறுகளை** அடையாளம் காட்டலாம்; 1) அரசியல் மரபுகளாகப் பெற்ற பஞ்சாப்,அஸ்ஸாம், மிஸோரம் பிரச்னைகளைத் தீர்த்தல்; 2) கட்சித் தாவல் ஊழலுக்குத் தீர்வு காணல்; 3) கருப்புப் பண ஊழலை ஒழித்து தூய்மையான, நேர்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுத்தல்; 4) மத்தியிலும் மாநிலங்களிலும் சாதனைகளைச் செய்யக்கூடிய அரசாங்கங்கள் அமைவதற்கான முயற்சியை மேற்கொள்ளல்; 5) புதிய கல்விக் கொள்கையின் மூலம் இளைய சமுதாயத்தினரின் ஆளுமையையும் நடத்தை நிலையையும் உயர்த்தல்; 6)தொழில்

நுட்ப உத்திகளைக் கையாண்டு, அதிகாரப் பரவல் முறையை ஊக்குவித்து, நாட்டைத் தன்னிறைவுடைய தேசமாக்குதல்.

### புதிய பொருளாதாரக் கொள்கை

ராஜீவ் காந்தி இந்தியப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதில் முனைப்பாக இருந்தார். இந்தியா விடுதலை அடைந்ததிலிருந்து நேருவின் நன்கொடையான 'கூட்டுப் பொருளாதார' த்தை வேத வாக்காகப் பின்பற்றி வந்தது. இந்திரா காந்தியின் இடதுசாரி தேசியமயக் கொள்கை 'பொதுத்துறை' யை சலுகைத் துறையாக்கி விட்டது. நேருவும் இந்திரா காந்தியும் அரசாங்கக் கட்டுப்பாடுகளை நெம்புகோல்களாகக் கொண்டு தனியார் துறையைக் கட்டுப்படுத்திப் பொதுத்துறையைப் பேணிக் காத்து வந்தனர். ஆனால் பிரதமர் ராஜீவ் காந்தி, நேரு – இந்திரா சோஷலிசப் பொருளாதார அணுகுமுறையில் **அடிப்படை மாற்றத்தைக்** கொண்டுவரத் தீர்மானித்தார். அதற்குக் காரணம் அரசாங்கத்தால் நடத்தப்படும் பொருளாதார நிறுவனங்கள் திறமையற்றதாகத்தான் இருக்கும் என்பது ராஜீவ் காந்தியின் துணிவு. அதிக மூலதனம், அதிகத் தொழிலாளர்கள், குறைவான உற்பத்தித் திறன் என்பதே பொதுத்துறையின் சிறப்பியல்புகளாக இருந்தன. பொதுத் துறையும் திறமையின்மையும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். **போட்டி** (Competition) தான் திறமையான பொருள் அல்லது சேவை உற்பத்தியின் அடிப்படைத் தத்துவம். எனவே, பொதுத்துறைப் பொருளாதாரத்துக்கு பதில் **போட்டிச் சந்தைப் பொருளாதாரமே** (Market Economy) ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் குவிமையமாக இருந்தது.

**தாராளமயமாக்கல்** (Liberaliszation), **உலக மயமாக்கல்** (Globalisation), **நவீனமயமாக்கல்** (Modernisation), **நகர்மயமாக்கல்** (Urbanisation) ஆகியவை ராஜீவ் காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையின் பரிமாணங்களாகும். 1) சுதந்திர தொழில் முனைவின் மூலம் திறந்த வெளிப் பொருளாதாரம்; 2) நவீன மேலாண்மை முறை; 3) புத்துணர்ச்சி யூட்டப்பட்ட ஆட்சி; 4)ஊழலற்ற திறமையான நிர்வாகம் ஆகியவை ராஜீவின் **புதிய மாற்றம்** (Rajiv's Perestroika) ஆகும்.

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் அரசாங்கத் துறைகளைத் தூய்மைப்படுத்தும் பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். அவரது புதிய பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான **வி.பி.சிங்கை** நிதி அமைச்சராக நியமித்தார். வி.பி.சிங்கும் ராஜீவ் காந்தியைப் போன்றே பொருளாதாரப் புரட்சி செய்வதில் பேரார்வம் கொண்டிருந்தார். எனவே, வி.பி.சிங் நிதி அமைச்சரானவுடன் இந்தியப் பொருளாதாரத்தைச் சலவை செய்யத் தீர்மானித்தார். கருப்புப் பணக்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள், அன்னியச் செலாவணி மோசடிக்காரர்கள், வரிஏய்ப்பாளர்கள், சட்டப்புறம்பாக இரகசிய வங்கிக் கணக்குகள் வைத்திருப்போர், முறையான உரிமம் பெறாமல் இறக்குமதி செய்வோர், கொள்ளை இலாபம் பெறும் வர்த்தகர்கள் ஆகியோர் மீது போர் தொடுத்தார்.

வி.பி.சிங் பொருளாதாரச் சீர்திருத்தத்தைத் தீவிரமாக மேற்கொண்டார். சந்தேகிக்கப்பட்ட வர்த்தகப் பேரரசுகளின் தலைவர்கள் வீடுகளும் சோதனை செய்யப்பட்டன. சிலர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். பொருளாதாரக் குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலம் வர்த்தக–தொழில்–வியாபார சமூகத்தைத் திருத்துவதற்காக வி.பி.சிங் மேற்கொண்ட முயற்சிகள் தொழிலதிபர்களுக்கு

அதிர்ச்சியைத் தந்தன; மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். வி.பி.சிங்கின் அதிரடி நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ளப்பட்டால் இந்தியப் பொருளாதாரம் புதுபலத்துடன் முன்னேறும் என்ற நம்பிக்கை மக்களிடையே எழுந்தது. வி.பி.சிங், ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக தேசத் தலைவர் அந்தஸ்தைப் பெற்றார். 'பொருளாதார சவோநாரோலா' (Girloamo Savonarola) என்ற பெயரைப் பெற்றார். இத்தாலிய இளவரசரான சவோநாரோலா (1452–1498) புளோரன்ஸ் நகரம் பாபத்தில் திளைப்பதை விட அந்நகரத்தை எரித்துவிடுவதே மேல் என்று கருதியவர்.

### நாடாளுமன்றத் தேர்தல், 1984

ராஜீவ் காந்தி காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரும், மக்களை உறுப்பினராகவும் இருந்தபோது தனது தனித்தன்மையை நிலைநாட்டிக் கொள்வதில் குறியாக இருந்தார். சஞ்சய் காந்தி செய்த தவறுகளை மனதில் கொண்டு அரசியலில் நேர்மையையும், அரசாங்கத்தில் திறமையையும், நிர்வாகத்தில் கட்டுப்பாட்டையும் கொண்டு வர வேண்டும் என்று விரும்பினார். **திருவாளர் பரிசுத்தம்** (Mr.Clean) என்று மக்களால் பாராட்டப் பட்டார். ஒத்த மனதுடைய அறிவும் ஆற்றலுமிக்க இளைஞர்களைத் துணை சேர்த்துக் கொண்டார். டூன் பள்ளியிலும், டிரினிட்டி கல்லூரியிலும் அறிமுகமான நண்பர்கள் பலர் ராஜீவுக்குக் கைகொடுத்தனர். குறிப்பாக ராஜீவ் தார், அருண்சிங், அருண்நேரு போன்றோர் ராஜீவ் காந்தியின் நம்பிக்கைக்குப் பாத்திரமானார்கள். ராஜீவ் காந்தியின் **தொலைநோக்கும் தூயமுயற்சியும்** (Vision and Mission) மக்களின் பேராதரவைப் பெற்றுத்தந்தன.

இந்திரா காந்தி பதவியிலிருந்தபோது கொலை செய்யப்பட்டதால் ராஜீவ் காந்தி பிரதமராக நியமிக்கப்பட்டார். மக்களின் ஆதரவோடும் ஒப்புதலோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராக வேண்டும் என்று தீர்மானித்தார். ராஜீவ் காந்தி தனது பிரதமர் பதவியை சட்டப்படி முறைப்படுத்த (legitimacy) முடிவு செய்தார். அதன் விளைவாக 1984 டிசம்பர் மாதம் மக்களவைத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலுக்காக ராஜீவ் காந்தி இந்திரா காந்தியைப் போன்றே 'சூறாவளிச் சுற்றுப் பயணம்' மேற்கொண்டார். தேர்தல் பிரச்சாரத்துக்குத் திரைப்பட நட்சத்திரங்களைத் திறமையாகப் பயன்படுத்தினார். குறிப்பாக வட இந்திய திரைப்பட உலகின் 'சூப்பர் ஸ்டாராக'த் திகழ்ந்த அமிதாப்பச்சன் தன்டூன் பள்ளித் தோழனுக்காக அரசியல் பிரவேசம் செய்தார். அலகாபாத் தொகுதியில் போட்டியிட்டார். சுனில் தத் பம்பாயில் போட்டியிட்டார்.

1984 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மக்களவையின் 508 இடங்களில் 401 இடங்களில் வெற்றி பெற்றது. அதாவது மக்களவையில் ஐந்தில் நான்கு இடங்கள் காங்கிரசுக்குக் கிடைத்தன. **இது நேருவும், இந்திராவும் பெற்ற அதிகபட்ச இடங்களை விட அதிகம்.** இத்தேர்தலின் மூலம் நேரு–காந்தி வாரிசு பாத்யதைக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்தது. மக்களாட்சியில் தேர்தல் மூலம் குடும்ப வாரிசு பாத்யதையை நிலைநாட்டிக் கொள்ள முடியும் என்பதற்கு 1984 தேர்தல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இடைக்கால மன்னர் குடும்ப வாரிசு மரபு தற்காலத் தேவைக்கேற்ப அரசியல் உருமாற்றம் அடைந்தது.

### போப்பால் பேரழிவு

ராஜீவ் காந்தி தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போது மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போப்பாலில் **யூனியன் கார்பைடு** (Union Carbid) என்ற

பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பன்னாட்டுத் தொழிற்சாலையின் குழாயிலிருந்து கசிந்து பரவிய நச்சு வாயுவால் (Methyl-isocyanate gas) 3,000 பேருக்கும் மேல் மாண்டனர். பல்லாயிரக்கணக்கானோர் உடல் ஊனமுற்றனர். போப்பால் விஷவாயுப் பேரழிவு பற்றி அறிந்த பிரதமர் ராஜீவ் காந்தி விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து வந்தார். இறந்தோர் மற்றும் உடல் நிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறினார். உடனடியாக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டார். எனினும் ராஜீவ் காந்தி போப்பால் பேரழிவின் பரிமாணங்கள் வெளி உலகுக்குத் தெரியாமல் தடுத்து விட்டார்; கைகளைக் கழுவிக் கொண்டு தேர்தல் பிரசாரத்துக்குக்காகப் பறந்து சென்று விட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் தாரிக் அலி. விபத்து நடந்த நான்காண்டுகளுக்குப் பின் 1989 பிப்ரவரி மாதம் பாதிக்கப்பட்டவர் களுக்கான இழப்பீடு பற்றி யூனியன் கார்பைடு கார்ப்பேரஷனுக்கும் ராஜீவ் காந்தி அரசாங்கத்துக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டது.

### காங்கிரஸ் நூற்றாண்டு விழாப் பேச்சு

ராஜீவ் காந்தி விரைந்து செயல்பட்டார். விமான வேகத்தில் இந்தியாவைக் கொண்டு செல்ல விரும்பினார். இரண்டாண்டுகளில் எட்டு முறை அமைச்சரவையில் மாற்றம் செய்தார். இந்திரா காங்கிரஸ் பதவி விரும்பிகள், பேராசைக்காரர்கள், சுயநலவாதிகள், சூழ்ச்சிக் காரர்கள், ஊழல் பேர்வழிகள், அதிகார மோகிகள் ஆகியோரின் கூடாரமாக இருந்ததைக் கண்டு மனம் புழுங்கினார். காங்கிரஸ் கட்டுப்பாட்டுக் கோட்டையாக மாறவேண்டும்—மாற்றப்பட வேண்டும் என்று விரும்பினார். ராஜீவ் காந்தி காங்கிரஸ் நூற்றாண்டு விழாவை (1885—1985) க் கோலாகலமாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தயாரித்து வெளியிட்ட நூற்றாண்டு நினைவு மலர் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதற்குக் காரணம், மலரின் முகப்பட்டையில் மோத்திலால் நேரு, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களின் படங்கள் இருந்தன. ஆனால் மகாத்மா காந்தியின் படம் இடம் பெறவில்லை.

காங்கிரஸ் நூற்றாண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசிய ராஜீவ் காந்தி தனது கருத்துக்களை ஒளிவுமறைவின்றி வெளியிட்டார். அப்பேச்சு காங்கிரஸ்காரர்கள் சுயசோதனை செய்துகொள்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது. ராஜீவ் காந்தியின் பேச்சில் காணப்பட்ட முக்கிய கருத்துக்களாவன:

1. வேலியே பயிரை மேய்கிறது! அரசாங்க ஊழியர்கள் ஊழியம் செய்வதோடு பதிலாக ஏழைகளை ஏமாற்றுகின்றனர். சட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய போலீசார் குற்றவாளிகளுக்குப் பாதுகாப்பாக உள்ளனர். வரி வசூலிக்க வேண்டியவர்கள் வரி ஏய்ப்போருக்கு உதவி செய்கின்றனர். இவர்களிடம் நேர்மையோ, பொதுநல நாட்டமோ, தொலைநோக்கோ, தேசிய குறிக்கோள்களைப் பற்றிய பிரக்ஞையோ, நவீன இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வோ இல்லை.
2. இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் சென்று மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட காங்கிரஸ் உழைக்கும் மக்களோடு தொடர்பு கொள்ளத் தவறி விட்டது. தேர்தலில் வெற்றி பெறுவது முக்கியமல்ல. மக்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், பிரச்னைகள் ஆகியவற்றோடு இடையறாத் தொடர்பு கொள்வதே முக்கியம்.
3. காங்கிரஸ் தலைவர்கள் சமுதாய மாற்றம் செய்வதை விட்டுவிட்டு ஆட்சியைப் பிடிப்பதிலும், பதவிகளைப் பகிர்ந்து கொள்வதிலும், அதிகாரத்தைப் பிரயோகிப்பதிலும்

திசைமாறிப் போய்விட்டனர். அதன் மூலம் தங்களைத் தாங்களே பலவீனப்படுத்திக் கொண்டு நாட்டையும் பலமிழக்கச் செய்துவிட்டனர்.

4. சாதாரண காங்கிரஸ் தொண்டர்கள் காங்கிரஸ் குறிக்கோள்களிலும், கொள்கைகளிலும், திட்டங்களிலும் ஆர்வம் கொண்டுள்ளனர். காங்கிரஸ் பாரம்பரியத்தில் பெருமை கொள்கின்றனர். ஆனால் **'அதிகாரத் தரகர்கள்'** (power brokers) தொண்டர்களின் முதுகில் ஏறிக்கொண்டு சவாரி செய்கின்றனர். இவர்கள் தங்களது செல்வாக்காலும், சலுகைகளை வாரி வழங்குவதாலும் மக்கள் இயக்கத்தை நிலமானிய செல்வந்தர் ஆதிக்கமாக மாற்றி விட்டனர். சாதி, சமய கோஷங்களை எழுப்பித் தங்களைத் தாங்களே நிலை நிறுத்திக் கொள்ளும் சுயநலக் கும்பல்களாகிவிட்டனர். சேவையும் தியாகமும் 'வெறும் ஒடாக'க் காட்சியளிக்கிறது. காங்கிரஸ் பேராசை வலைக்குள் சிக்கிக் கொண்டது.

5. உயர்ந்த நோக்கங்கள், உன்னதமான லட்சியங்கள் பற்றிப் பேசுகிறோம். ஆனால் நம்மிடையே கட்டுப்பாடோ, கொள்கைப் பிடிப்போ, பொதுநல அக்கறையோ சிறிதும் இல்லை. ஊழல் பொறுத்துக் கொள்ளப்படுவது மட்டுமல்ல; அது தலைமைக்கான தகுதியாவும் கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியின் தலைவராயிருந்த ராஜீவ் காந்தி அரசாங்க ஊழியர்கள், காங்கிரஸ்காரர்கள் பற்றிப் பகிரங்கமாகப் பேசியது பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ராஜீவ் காந்தியின் பேச்சு குறைந்த காலத்தில் நிறைய சாதிக்கவேண்டும் என்ற ஆதங்கத்தையும், நூற்றாண்டு கால காங்கிரஸ் கலாச்சாரத்தை ஓராண்டில் மாற்றி விட வேண்டும் என்ற அவசரத்தையும் வெளிப்படுத்துவதாக இருந்தது. ஒரு இளந்தலைவரின் பொறுமையின்மை காங்கிரஸ் தலைவர்கள் அப்பேச்சில் ராஜீவ் காந்தியின் 'அரசியல் அனுபவமின்மை' யைக் கண்டனர். ராஜீவ் காந்தியிடம் வேகம் இருந்த அளவுக்கு விவேகமில்லை என்ற எண்ணம் எழலாயிற்று.

### அஸ்ஸாம் உடன்பாடு (Assam Accord), 1985

ராஜீவ் காந்தி பிரதமரான ஒன்றரை ஆண்டுகளுக்குள் எதிர் கொண்ட சவால்களில் குறிப்பிடத்தக்கவை அஸ்ஸாம் அகதிகள் பிரச்னையும், பஞ்சாப் பிரச்னையும் ஆகும். பிரதமர் இந்திரா காந்தியால் தீர்வுகாணாமல் விடப்பட்ட அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்கு ஒரு வழியைக் கண்டார் ராஜீவ் காந்தி. அஸ்ஸாம் மாணவர்கள் தலைவர்களுடன் ஒரு உடன்பாட்டுக் வந்தார் (1985, ஆக. 15). அந்த அஸ்ஸாம் உடன்பாட்டின்படி 1) 1961 க்கு முன் அஸ்ஸாமுக்கு வந்து குடியேறியோர் அஸ்ஸாமியராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்; 2) 1961க்குப்பின் அஸ்ஸாமுக்கு வந்த, குறிப்பாக பங்ளாதேஷ் போருக்குப்பின் வந்த, அகதிகளின் குடியுரிமைப் பறித்து விடுதல் அல்லது பங்ளாதேசுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்; 3) இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு சாலை, பேப்பர் மில், தொழில்நுட்பக் கல்லூரிகள் உள்ளிட்ட பொருளாதார வளர்ச்சித் திட்டம்; 4) அஸ்ஸாமில் மக்களின் கலாச்சாரப் பாதுகாப்பு ராஜீவ் காந்தி செய்து கொண்ட அஸ்ஸாம் உடன்பாடு அஸ்ஸாம் 'மண்ணின் மைந்தர்' களின் பேராதரவைப் பெற்றது. ஆனால் அஸ்ஸாம் முஸ்லீம் சிறுபான்மைச் சமூகத்தினரின் ஆதரவை இழக்கச் செய்தது. அந்த இழப்பு 1985 டிசம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் பிரதிபலித்தது.

## ராஜீவ் காந்தி – லோங்கோவால் உடன்பாடு, 1985
## (Rajiv Gandhi - Longowal Agreement)

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் எதிர் கொண்ட சவால்களில் ஒன்று பஞ்சாப் பிரச்னை ஆகும். பஞ்சாப் மொழிவழி மாநிலமாவதை நிராகரித்தார் நேரு (1956). அரியானாவைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, சண்டிகாரை யூனியன் பிரதேசமாக்கி பஞ்சாப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் கண்டார் இந்திரா காந்தி (1966). அவர் சீக்கிய பயங்கரவாதத்துக்குப் பலியானார் (1984). பிரதமர் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி பஞ்சாப் பிரச்னைக்கு 'இராணுவத் தீர்வு' க்குப் பதில் நல்லிணக்கத் தீர்வு காண விரும்பினார். அதன் விளைவாக 1985 ஜூலை 24 ஆம் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி அகாலி தளத் தலைவர் சந்த் லோங்கோவாலுடன் வரலாற்றுச் சிறப்பு மிக்க உடன்பாடு செய்து கொண்டார்.

### மதிப்பீடு

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் செய்த முதல் காரியம் சீக்கிய எதிர்ப்புக் கலவரம் பரவாமல் தடுத்ததாகும். அதையடுத்து அவர் அஸ்ஸாம் அகதிகள் பிரச்னைக்குத் தீர்வு கண்டார். அதன்பின் ராஜீவ் காந்தி அகாலிதளத் தலைவர் லோங்கோவாலுடன் செய்து கொண்ட உடன்பாடாகும். முப்பத்தி மூன்று மணி நேரம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியபின் அவ்வுடன்பாடு ஏற்பட்டது. அரசியல் நோக்கர்கள் அந்த உடன்பாட்டை லோங்கோவாலின் தனிப்பட்ட தீரச்செயல் என்று கருதினர். ராஜீவ் காந்தி சீக்கிய தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டார். அதேபோன்று லோங்கோவாலும் கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தார். அதற்காக இருவருமே விமர்சிக்கப்பட்டனர். லோங்கோவால் ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட உடன்பாட்டுக்கு அகாலி தளத்தின் ஒப்புதலைப் பெற்றார் (ஜூலை 26).

ராஜீவ் காந்தி இராணுவத் தீர்வுக்கு பதில் லோங்கோவாலுடன் அமைதித் தீர்வு கண்டமைக்காகப் பொதுவாகப் பாராட்டப்பட்டார். எனினும் அரியானாவும் ராஜஸ்தானும் அந்த உடன்பாட்டில் ஆர்வம் காட்டவில்லை. விளைவுகள் என்று பார்க்கப்போனால் ராஜீவ் காந்தி லோங்கோவால் உடன்பாடு எதையும் சாதிக்கவில்லை; எந்த பிரச்னையையும் தீர்க்கவில்லை! ராஜீவ் காந்தியும் லோங்கோவாலும் ஜனரஞ்சக 'வக்கணை வாசங்களை' வாரி வழங்கினர். பஞ்சாப் பிரச்னைக்குரிய தீர்வைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு கமிஷன்களிடம் விடப்பட்டது.

இந்த உடன்பாடு சூட்டைத்தணிக்க உதவியதேயன்றி ஜுரத்தைப் போக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மூலம் அந்த உடன்பாட்டுக்கு அங்கீகாரம் காண முயன்றார் ராஜீவ் காந்தி. ஆனால் 1985 ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி தேர்தலுக்கு முன் லோங்கோவால் ஷெர்பூர் கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் நடைபெற்ற பஞ்சாப் சட்டமன்றத் தேர்தலில் அகாலி தளம் வெற்றி பெற்றது. சுர்ஜித் சிங் பர்னாலா முதலமைச்சரானார். எனினும் பஞ்சாபியர் நீலநட்சத்திர நடவடிக்கையின் அதிர்ச்சித் தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. அகாலி தளம் உட்கட்சிப் பூசலாலும் பிளவாலும் பலமிழந்தது.

### தொழில்நுட்ப மிஷன்கள் (Technology Missions)

சோதனைகள் வேதனைகளுக்கிடையே அஸ்ஸாம் மற்றும் பஞ்சாப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்ட பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியாவை 21–ம் நூற்றாண்டுச்

சவால்களை எதிர்கொள்வதற்குத் தயாராக்கும் முயற்சியில் முனைப்புடன் [illegible] தொழில்நுட்பத் திறமைகளை வளர்த்துக் கொள்வதன் மூலமே இதைச் சாதிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்த ராஜீவ் காந்தி **சாம் பிட்ரோடா** (Sam Pitroda)வின் ஆலோசனையின் பேரில் 6 **தொழில்நுட்ப மிஷன்** (Technology Missions)களைத் தோற்றுவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியால் துவக்கப்பட்ட 6 தொழில்நுட்ப மிஷன்களாவன: **1) குடிநீர் மிஷன்** (Drinking Water Mission). இந்தியர் அனைவருக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கு நன்கு பாதுகாக்கப்பட்ட, சுகாதாரமான, போதிய குடிநீர் கிடைக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மண்ணியல் (Geology), சிவில் பொறியியல் (Civil Engineering), உயிர் வேதியல் (Bio-Chemistry) ஆகியவற்றின் துணை கொண்டு செயற்கைக்கோள்கள் (Satellites) மூலம் நாட்டிலுள்ள நீர்வளங்களைக் கண்டறிந்து, வெளிக் கொண்டு வந்து, சேமித்து, தூய்மைப்படுத்தி மக்களுக்கு வினியோகிக்கும் மாபெரும் முயற்சியில் குடிநீர் மிஷன் ஈடுபட்டது. **2) எழுத்தறிவு மிஷன்** (Literacy Mission). 'மக்கள் எழுத்தறிவில்லை' (Mass Illiteracy) என்ற களங்கத்தைப் போக்கி இந்திய கிராமங்களை எழுத்தறிவு மூலம் தேசிய வளர்ச்சி நீரோட்டத்தோடு இணைக்கும் மகத்தான முயற்சி இது. இத்திட்டத்தின் மூலம் கிராமங்களில் தொலைக்காட்சி (Television), பார்த்தல் – கேட்டல் ஒலி நாடாக்கள் (Video and Audio Cassettes), கற்பித்தல் சாதனங்கள் முறைகள் மூலம் '**அனைவருக்கும் எழுத்தறிவு**' என்ற கல்வித் திட்டம் துவக்கப்பட்டது. இதுவே பின்னர் '**முழு எழுத்தறிவு இயக்க**'மாக மலர்ந்தது.

**3) நோய் தடுப்பு மிஷன்** (Immunisation Mission) குழந்தைப் பேறுகால இறப்பு, இளம்பிள்ளை வாதம், தட்டம்மை போன்ற மழலை நோய்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்தோடு நோய் தடுப்பு மிஷன் துவக்கப்பட்டது. **4) பால் உற்பத்தி மிஷன்** (Milk Production Mission). சத்துணவுக்கு ஆதாரமான பால் உற்பத்தியைப் பெருக்கி வெண்மைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான செயல் திட்டம் இது. **5) சமையல் எண்ணெய் மிஷன்** (Edible Oill Mission). சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு அந்நிய செலவாணி விரயமாவதைத் தடுத்து 'சமயலெண்ணெய் சுயதேவைப் பூர்த்தி' என்ற இலக்கை எட்டுவதற்காகத் துவக்கப்பட்ட மிஷனாகும். **6) தொலைபேசி மிஷன்** (Telephone Mission). 'ஒரு கிராமத்துக்கு ஒரு தொலைபேசி' என்ற குறிக்கோளுடன் 20–ம் நூற்றாண்டு முடிவதற்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற இலக்குடன் இந்த மிஷன் அறிமுகப்படுத்தப்பட்டது.

## தொலைத் தொடர்பு புரட்சி ( Telecommunication Revolution)

பிரதமர் ராஜீவ் காந்தி சாம் பிட்ரோடாவின் ஆலோசனையின்படி தொலைத் தகவல் தொடர்பில் மாபெரும் மாற்றங்களைச் செய்தார். தானியங்கி தொலைத் தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்வதற்குப் பதில் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. **கண்ணாடி இழை** (Fiber Optics) தயாரிப்பதற்காக இரண்டு தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. இந்தியாவின் பெரிய நகரங்களை இணைப்பதற்காக '**உயர் வேக கண்ணாடி இழை பெருவழி**' (High Speed Fiber-Optic High Way) உருவாக்கப்பட்டது. 400 மாவட்டத் தலைமையகங்கள் தானியங்கி தொலைத் தொடர்பால் இணைக்கப்பட்டன. 120 நாடுகளுடன் **தொலைத் தொடர்பு** (International Direct Dialing) ஏற்படுத்தப்பட்டது. **பொதுத் தொலைபேசி நிலையங்கள்** (Public Call Offices) நாடு முழுவதும் துவங்கப்பட்டன. ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்ட **தொலைபேசிகள்** (Telephones) அன்றாடத் தேவைக்கான அவசியப் பொருளாயிற்று. 1980–ல் இருந்த 2.5 மில்லியன

தொலைபேசிகளின் எண்ணிக்கை 1990ல் 5 மில்லியனாகவும், 1998ல் 20 மில்லியனாகவும் விரிவடைந்தது! இந்தியா தொலைத் தொடர்புப் புரட்சியை வியப்போடு வரவேற்றுப் பயன்பெற்றது. ராஜீவ் காந்தியின் தொலைநோக்குத் தீர்மானத்தின் விளைவாக இந்தியா உலகத் தகவல் தொழில்நுட்பப் புரட்சியில் குறிப்பிடத்தக்க பங்கேற்க முடிந்தது.

**கணினிமயமாக்கல் திட்டம் (Computerisation Programme)**

கணினிமயமாக்கல் திட்டம் பிரதமர் இந்திரா காந்தியின் இரண்டாவது ஆட்சிக் காலத்தின் இறுதியில் உருவாக்கப்பட்டாலும், ராஜீவ் காந்தி இத்திட்டத்துக்கு ஊக்கமளித்து, ஆதரவளித்து, உதவி செய்து நடைமுறைப்படுத்தினார். இந்தியத் தொழில் முனைவோர்களே கணினிகளைத் தயாரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கணினி உதிரிபாகங்களுக்கான இறக்குமதி வரி கணிசமாக குறைக்கப்பட்டது. சந்தைப் போட்டி இருந்தால்தான் கணினியின் தரம் உயரும், விலை குறையும், தேவை பூர்த்தியாகும் என்பதற்காக வெளிநாட்டுக் கணினி உற்பத்தியாளர்கள் இந்தியாவில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். அரசாங்க அலுவலகங்களிலும், கல்வி நிலையங்களிலும் கணினி அறிமுகப்படுத்தப்பட்டது. ராஜீவ் காந்தி எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் கணினிமயமாக்கல் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தினார். அதன் விளைவாக கணினி இந்தியரிடையே விரைந்து செல்வாக்குப் பெற்றது. இத்திட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. **கணினி மென்பொருள்** (Computer Software) ஏற்றுமதியால் அந்நிய செலவாணி அதிகரித்தது. மென்பொருள் தொழில்நுட்பத் திறன் கொண்ட இந்தியர்களுக்கு வெளிநாடுகளில் வரவேற்பு பெருகியது! சுருங்கக் கூறின் இந்தியாவில் **தகவல் தொடர்புப் புரட்சி** (Information and Communication Revolution) ஏற்பட்டது.

**சாம் பிட்ரோடா (Sam Pitroda)**

**சாம் பிட்ரோடா** ஒரிசாவில் ஒரு குக்கிராமத்தில் பிறந்து, கிராமக் கல்வி பெற்று, தொழில் கல்வி பயின்று, அமெரிக்கா சென்று தொழில்நுட்பப் பயிற்சி பெற்று, **மின் இலக்க மாற்றுத் தொழில் நுட்பத்தில்** (Analogue Digital Conversion Technology) 30 காப்புரிமைகளை (Patents)ப் பதிவு செய்து, தொலைத் தகவல் தொடர்பில் சாதனைகள் புரிந்து, பெரும் பொருள் ஈட்டிய தொழில் முனைவோர் ஆவார். தன் அறிவும், ஆற்றலும், அனுபவமும் தாய் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்ற கனவோடும் கற்பனையோடும் இந்தியா திரும்பினார். 5 மாதங்கள் காத்திருந்து பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்துத், தன் கனவுத் திட்டத்தை விளக்கினார். சாம் பிட்ரோடாவின் கனவுத் திட்டத்தால் கவரப்பட்ட பிரதமர் இந்திரா காந்தி அவரைத் தனது தொழில்நுட்ப ஆலோசகராக நியமித்தார். அதுமட்டுமல்ல. அவரது திட்டத்துக்காக 36 மில்லியன் அமெரிக்க டாலர் கொண்ட கட்டமைப்பு நிதி (Corpus Fund)யைத் துவக்கவும் முன்வந்தார். இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின்னர் சாம் பிட்ரோடா பிரதமர் ராஜீவ் காந்திக்கும் ஊதியம் வாங்கா தொழில்நுட்ப ஆலோசகராகத் தொடர்ந்து பணியாற்றினார். இவரது இடையறாத முயற்சியின் விளைவாக **தொலைநிலை இயக்க மேம்பாட்டு மைய** (Centre for Development of Telematics - C.Dot)மும் **6 தொழில்நுட்ப மிஷன்களும்** (Technology Missions) துவக்கப்பட்டன.

பிட்ரோடா பிரதமரின் ஆதரவோடும் அரசாங்க நிதி உதவியோடும் 420 இளம் விஞ்ஞானிகளோடு மூன்று ஆண்டுகள் பாடுபட்டு 128 வழி கிராம தொலைபேசி மையத்தையும், தனியார் தானியங்கி கிளை தொலைபேசி நிலையத்தையும், 512 வழிகளைக்

கொண்ட மைய தொலைபேசி நிலையத்தையும் வடிவமைத்தார். இவற்றுக்குத் தேவையான சாதனங்களைத் தயாரிக்கவும், விற்பனை செய்வதற்காகவும் 40 பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன. பிட்ரோடாவின் முயற்சியும் வெற்றியும் நாட்டில் பெரும் பரபரப்பையும், எதிர்ப்பையும், ஏற்படுத்தின; பாராட்டைப் பெற்றன.

### சுற்றுச் சூழல் பாதுகாப்பு

சத்தமும் அசுத்தமும் இந்திய கலாச்சாரத்தின் இணைபிரியா அம்சங்கள்! ஆன்மாவைப் பரிசுத்தமாக வைத்துக் கொள்வதைப் பற்றிக் கவலைப்பட்டு சுற்றுச் சூழல் சுத்தத்தைப் புறக்கணித்துவிட்ட நாடு இந்தியா!! புனித கங்கையைக் களங்கப்படுத்திய புண்ணிய பூமி இது. எனவே, கங்கை நதியைத் தூய்மைப்படுத்தவும், மக்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தவும் தனியே **சுற்றுச்சூழல் அமைச்சரகம்** (Ministry for Environment) உருவாக்கப்பட்டது. சுற்றுச்சூழலைப் பாதிக்கக்கூடிய பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதியைப் பெற வேண்டியது கட்டாயமாக்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குத் தொழில்நுட்பத்தின் பங்களிப்புக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

### நலத்திட்டங்கள்

பெண்ணுரிமையைப் பாதுகாக்கவும், கிராம வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், நுகர்வோர் நலனைப் பேணவும், அரசாங்கத் தகவல் துறை சுதந்திரமாகச் செயல்படவும் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. வரதட்சனைக் கொடுமைகளிலிருந்தும், குற்றங்களிலிருந்தும் பெண்களைக் காப்பாற்றும் பொருட்டு 1986ல் **வரதட்சனை ஒழிப்புச் சட்டம்** (Abolition of Dowry Act, 1986) கொண்டு வரப்பட்டது. 1988ல் தயாரிக்கப்பட்ட **பெண்களுக்கான தேசிய தொலைநோக்குத் திட்ட** (National Perspective Plan for Women)ப்படி 1) அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களிலும் பெண்களுக்கு 30 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்; 2) உள்ளாட்சி ஊழியர்களில் 50 சதவிகித இடங்களைப் பெண்களுக்கு வழங்க வேண்டும்; 3) கிராமப் பெண்களின் உடல் நலனுக்கும், பெண் கல்விக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். 1989 நவம்பர் 14 ஆம் தேதி நேரு பிறந்த நன்னாளன்று அறிமுகப்படுத்தப்பட்ட **ஜவஹர் ரோஜ்கர் யோஜனா** (Jawahar Rozgar Yojana) வேலை வாய்ப்புத் திட்டப்படி ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தில் ஒருவருக்காவது ஆண்டுக்கு 50–லிருந்து 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க உத்திரவாதம் அளிக்கப்பட்டது. **நுகர்வோர் நலன்களைப் பாதுகாப்பதற்காகத் தனிச் சட்டம்** (Consumer Protection Act) இயற்றப்பட்டது. அரசாங்கத்தின் செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறை – வானொலி, தொலைக்காட்சி – சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டது. அரசாங்கக் கொள்கைகளையும், திட்டங்களையும் விமரிசனம் செய்யும் நிகழ்ச்சிகள் கூட ஊக்குவிக்கப்பட்டன.

### இந்தியத் திருவிழாக்கள்
### Indian Festivals

திருவிழாக்கள் இந்தியக் கலாச்சாரத்தின் பிரதிபலிப்புகள்; கலை வடிவங்கள். மங்கி மறைந்து கொண்டிருந்த இக்கலை வடிவங்களுக்கேற்ப புத்துயிர் அளிக்கும் பொருட்டு இந்தியத் தலைநகருக்கு வெளியே கிராமக் கலைகள் வளர விரிவான ஏற்பாடான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வழக்கமாக சுதந்திர தின, குடியரசு தின

விழாக்களின் போது டெல்லி செங்கோட்டையில் நிகழ்த்தப்பட்டு வந்த நிகழ்ச்சிகள் மாநில மற்றும் மாவட்டத் தலைநகர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. இதற்கென நாட்டின் பல பகுதிகளில் வட்டார **கலாச்சார மையங்கள்** (Zonal Cultural Centres) துவக்கப்பட்டன. அதுமட்டுமல்ல. **'இந்தியத் திருவிழாக்கள்'** வெளிநாடுகளிலும் நிகழ்த்திக் காட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கான கிராமக் கலைஞர்கள் வெளிநாடுகள் சென்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. இதன் மூலம் இந்தியா உலகக் கலாச்சார வரைபடத்தில் இடம் பெற்றது. உலகக் கலை அரங்கில் இந்தியாவின் நிலை உயர்ந்தது. சமகால இந்தியாவில் **கலாச்சார மறுமலர்ச்சி** (Cultural Renaissance) ஏற்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்தியின் புதிய கல்விக் கொள்கையும், புதிய பஞ்சாயத்து ராஜ்ய அமைப்பு முறையை அரசியலமைப்புச் சட்டமாக்கும் முயற்சியும் பிற சாதனைகளாகும்.

### புதிய கல்விக் கொள்கை (New Education Policy)

1985 ஆகஸ்டு 15 ஆம் தேதி இந்திய விடுதலை நாளன்று பிரதமர் ராஜீவ் காந்தி செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றி உரையாற்றுகையில் புதிய கல்விக் கொள்கையை அறிவித்தார். ஒரு மாதத்துக்குள் அக்கொள்கையை நாட்டுக்கு அளிப்பதாக அறிவித்தார். அவ்வாறே கல்வி அமைச்சர் கே.சி. பந்த் புதிய கல்விக் கொள்கை பற்றிய அரசாங்க ஆவணத்தை மக்களவையில் சமர்ப்பித்தார். ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கை நான்கு பகுதிகளைக் கொண்டது. 1) கல்வி, சமுதாயம், வளர்ச்சி; 2) இந்தியக் கல்வி வளர்ச்சி பற்றிய கண்ணோட்டம்; 3) கல்வி முறை பற்றிய மதிப்பீடு; 4) கல்விச் சீரமைப்புக்கான அணுகுமுறை.

1968–ல் உருவாக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கை நடைமுறைச் சிக்கல்களால் சரியாகச் செயல்படவில்லை. துவக்கக் கல்வி நிலையிலிருந்து முதுநிலை மற்றும் ஆராய்ச்சி நிலை வரை இந்திய கல்வி முறை குழப்பத்தில் இருந்தது. எனவே ராஜீவ் காந்தி அரசாங்கம் இந்தியக் கல்வி விதிமுறைளைச் சீரமைக்கும் நோக்கத்தோடு புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியது. **வளர்ச்சி** (Development), **ஒருமைப்பாடு** (Integration), **நடுநோக்கு** (Equity), **தரம்** (Quality), **பொருத்தம்** (Relevance), **முதன்மைநிலை** (Excellence) ஆகியவை புதிய கல்விக் கொள்கையின் சிறப்பு அம்சங்களாகும்.

**புதிய கல்விக் கொள்கையின் நோக்கங்களாவன:**

1) அனைவருக்கும் ஆரம்பக்கல்வி (Universalisation of Primary Education) 1995 ஆண்டுக்குள் 100 விழுக்காடு எழுத்து அறிவை (Literacy) எட்டுதல்; 2) மேல்நிலைக்கல்வி நிலையில் தொழிற் கல்விக்கு (Vocationalisation at Higher Secondary level) முக்கியத்துவம் கொடுத்தல்; 3) உயர் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை நவீனமயமாக்கல் (Modernisation of Higer and Technical Education); 4)இந்திரா காந்தி பெயரால் ஒரு திறந்த வெளிப் பல்கலைக் கழகம் (Indira Gandhi Open University) எற்படுத்தல்; 5) நடுநோக்கு சமத்துவ நோக்கத்தை நிறைவேற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய மாதிரி நவோதயா பள்ளிகளை (Navodaya Schools)த் துவக்கல்; 6) ஜம்மு–காஷ்மீர் கல்வி முறை அனுபவத்தை வழிகாட்டியாகக் கொண்டு மாவட்ட கல்வி மையங்களை (District Education Centres) ஏற்படுத்தல்; 7) உயர் கல்விக்கு அளிக்கப்படும் மானியத்தைக் குறைத்தல் ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்தல்; தொழிற் கல்விக்கான வசதிகளை

விரிவுபடுத்தல்; உயர்நிலைக் கல்வி நிறுவனங்களைப் பொருத்தமானவையாகச் செயல்படச் செய்தல்.

புதிய கல்விக் கொள்கை நாடு முழுவதும் விவாதிக்கப்பட்டது. கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் கருத்தரங்கங்களும், பட்டறைகளும், மாநாடுகளும் நடத்தப்பட்டன. 1986 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டது. அதன் அடிப்படையில் செயல் திட்டம் (Programme of Action) தயாரிக்கப்பட்டது. 23 செயல்குழுக்கள் (Task Forces) நியமிக்கப் பட்டன. புதிய கல்விக் கொள்கை திறமையாகச் செயல்படுவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. துவக்கப் பள்ளிகளைச் சீரமைக்கக் 'கரும்பலகை நடவடிக்கை' (Operation Black Board) மேற்கொள்ளப்பட்டது. மாவட்டங்களில் தரமான நவோதயப் பள்ளிகள் துவக்கப்பட்டன. மேல்நிலைக் கல்வி நிலையில் தொழிற் படிப்புகள் (Vocational courses) அறிமுகப்படுத்தப்பட்டன. கல்லூரி –பல்கலைக்கழக– தொழிற்கல்வி நிறுவனங்கள் நவீனமயமாக்கப்பட்டன. கல்லூரி ஆசிரியர் பயிற்சி மையங்கள் (Academic staff colleges) நாடெங்கிலும் துவக்கப்பட்டன. சுயாட்சிக் கல்லூரிகள் (Autonomous colleges) துவங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உயர் மற்றும் தொழிற் கல்வியின் தரக்கட்டுப்பாடு (Accreditation) செய்ய வேண்டியதன் இன்றியாமை வலியுறுத்தப்பட்டது. இக்கல்விப் புரட்சி ராஜீவ் காந்தி அரசாங்கத்தின் தனிப்பெரும் சாதனையாகும். இது சமகால இந்தியக் கல்வி வரலாற்றில் முக்கிய மைல்கள் ஆகும்.

**ஷா பானு வழக்கு, 1985 (The Shah Banu Case)**

ராஜீவ் ஆட்சிக்காலத் துவக்கத்தில் ஷா பானு பீகத்தின் வழக்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1985 ஏப்ரல் மாதம் உச்ச நீதிமன்றம் ஷா பானு கொடுத்த ஜீவனாம்ச வழக்கில் அவருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. அத்தீர்ப்பு முஸ்லீம் பழமைவாதிகளின் எதிர்ப்பையும், விரோதத்தையும் கிளப்பி விட்டது. ஷா பானு வழக்கு என்ன?

முகமது அகமது கான் என்ற வழக்குரைஞர் ஷா பானு பீகத்தைத் திருமணம் செய்து கொண்டார். 46 ஆண்டுகள் குடும்ப வாழ்க்கை நடத்தினார். அவர்களுக்கு 5 பிள்ளைகள். திடீரென அகமது கான் ஷா பானுவை வீட்டை விட்டு விலக்கினார். நிராதரவாக விடப்பட்ட ஷா பானுவை மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தோர் மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு கணவனுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார் (1978). வழக்கு நடந்து கொண்டிருக்கையில் அகமது கான் ஷா பானுவை விவாகரத்து செய்து விட்டதாகக் கூறினார். இருப்பினும் மாஜிஸ்ரேட் முகமது கான் ஷா பானுவுக்கு மாதம் ரூ25 ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

தனக்குக் கொடுக்கப்படும் ஜீவனாம்சத் தொகை மிகவும் குறைவாக உள்ளதாகக் கூறி ஷா பானு மேல் முறையீடு செய்தார். உயர்நீதிமன்றம் ஷா பானுவுக்குக் கொடுக்க வேண்டிய ஜீவனாம்சத் தொகையை ரூ.179 பைசே 20 ஆக உயர்த்தித் தீர்ப்பளித்தது. முகமது அகமது கான் அந்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். உச்ச நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது. அதாவது விவகரத்து செய்யப்பட்ட ஷா பானு பிற இந்தியப் பெண்களைப் போன்றே ஜீவனாம்சம் பெறும் உரிமையை உடையவர் என்று தீர்ப்பளித்தது. அது மட்டுமல்ல. ஷா பானுவுக்குக் கொடுக்க வேண்டிய மாத ஜீவனாம்சத் தொகையை ரூ.500 ஆகவும் உயர்த்தியது.

ஷா பானு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு சமய—அரசியல் சர்ச்சையைக் கிளப்பி விட்டது. முஸ்லீம் பெண்கள் முஸ்லீம் தனிச் சட்டப்படி (Muslim Personal Law) நடத்தப்படவேண்டுமா? அல்லது சமயச் சார்பற்ற பொதுச் சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டுமா? முஸ்லீம் முற்போக்குவாதிகள் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்றனர். ஆனால் முஸ்லீம் சனாதனவாதிகள் அத்தீர்ப்பைக் கடுமையாகக் கண்டித்தனர். எதிர்த்தனர். பிரதமர் ராஜீவ் காந்தி இருதலைக் கொள்ளி எறும்பானார். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஆதரித்தால் முஸ்லீம் சிறுபான்மையினரின் ஆதரவை இழக்க வேண்டும். ஆதரிக்காவிட்டால் இந்துக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டும். எதிர்பாரா விதமாக ஷா பானு வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். ராஜீவ் காந்தி தர்ம சங்கடமான நிலையிலிருந்து தப்பினார்.

**முஸ்லீம் பெண்கள் மசோதா, 1986 (Muslim Women's Bill, 1986)**

**பனட்வாலா மசோதா**

1986 பிப்ரவரி மாதம் ராஜீவ் காந்தி அரசாங்கம் முஸ்லீம் பெண்கள் மசோதாவை நாடாளுமன்றத்தில்அறிமுகப்படுத்தியது. அந்த மசோதா விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லீம் பெண்களின் உரிமைகளைப் பற்றியது. அம்மசோதா பனட்வாலா மசோதா (Banatwala Bill) வைத் தள்ளுபடி செய்தது. பனட்வாலா மசோதா என்பது என்ன?— ஜி.எம்.பனட்வாலா பொதுச் செயலாளராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தபோது இந்தியக் குற்ற நடைமுறைச் சட்ட (Criminal Procedure code)த்தில் திருத்தம் செய்வதற்காக ஒரு தனியார் மசோதாவைக் கொண்டு வந்தார். அம்மசோதாவின் முக்கிய நோக்கங்கள் இரண்டு: 1) நீதிமன்றம் முஸ்லீம் பெண்களுக்கு ஜீவனாம்சம் வழங்குவதைத் தடை செய்தல்; 2) முஸ்லீம் பெண்கள் முஸ்லீம் தனிச்சட்டத்தை மீறி ஜீவனாம்சம் கேட்பதற்கு உரிமை இல்லை என்பதை உறுதி செய்தல். பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப் பட்டு, சட்ட அங்கீகாரம் பெறாமலிருந்த இப்பிற்போக்கு மசோதாவை ராஜீவ் காந்தி கொண்டு வந்த முஸ்லீம் பெண்கள் மசோதா ரத்து செய்தது.

**முஸ்லீம் பெண்கள் மசோதா**

முஸ்லீம் பெண்கள் மசோதா பனட்வாலா மசோதாவை விட முற்போக்கானதா? முஸ்லீம் பெண்கள் மசோதாவின்படி விவாகரத்து செய்யப்பட முஸ்லீம் பெண்களுக்கு ஜீவனாம்சம் கொடுக்கும் பொறுப்பு விவாகரத்து செய்த கணவனுக்கு இல்லை. மாறாக, அப்பொறுப்பை அப்பெண்ணின் பெற்றோரோ அல்லது உறவினர்களோ அல்லது முஸ்லீம் அறக்கொடை நிறுவனங்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று புதிய மசோதாகூறியது. 1986 மே மாதம் முஸ்லீம் பெண்கள் மசோதா சட்டமாயிற்று. மசோதாவின் உள் முறண்பாடு அதன் முற்போக்குத் தன்மையை முனைமழுங்கச் செய்துவிட்டது.

ராஜீவ் காந்தியின் முஸ்லீம் பெண்கள் சட்டம் குளவிக் கூட்டில் கை விட்டது போலாயிற்று. அச்சட்டம் அபாயகரமான சமய சர்ச்சையை ஏற்படுத்தியது. ஷா பானு வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை உரக்க ஆதரித்த அமைச்சர் அரீப் முகமது கான் மிகுந்த மனவுருத்தத்துடனும் ஏமாற்றதுடனும் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். விவாகரத்து பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு 'வக்ப் போர்டு' போன்ற அறக்கட்டளை நிறுவனத்திலிருந்து எப்படி ஜீவனாம்சம் கொடுக்க முடியும் என்று முஸ்லீம் தலைவர்கள் எதிர்த்தனர். இந்து தீவிரவாதிகள் சமயச்சார்பின்மையை சமயச் சார்புடைமையாக்க முயன்றனர்.

## மதிப்பீடு

நேரு 'இந்து சட்ட மசோதாக்களை' (Hindu Code Bills) நிறைவேற்றியதன் மூலம் பல பழைய இந்து மரபு முறைகளைத் துணிவுடனும் தொலை நோக்குடனும் மாற்றினார். இந்துக்களின் எதிர்ப்பையும் மீறி சட்டச் சீர்திருத்தங்களைச் செய்தார். அந்த துணிவும் தொலைநோக்கும் அவரது பேரன் ராஜீவ் காந்திக்கு இல்லாது போனது வியப்புக்குரியதே. ராஜீவ் காந்தியின் அரசியல் சமயோசிதம் அவரது அரசியல் விவேகத்தை விழுங்கிவிட்டது. ராஜீவ் காந்தி சொல்லில் முற்போக்குவாதியாகவும், செயலில் பிற்போக்கு வாதியாவும் காட்சியளித்தார். நேருவாலும் இந்திரா காந்தியாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட சமயச்சார்பின்மை அணுகுமுறைக்குப் பின்னடைவு ஏற்பட்டது. ராஜீவ் காந்தி நிறைவேற்றிய முஸ்லீம் பெண்கள் மசோதா அவர் செய்த 'பயங்கர தவறு' ஆகும் என்று குறிப்பிட்டுள்ளார் வேத் மேத்தா.

### இந்தியத் தபால் சட்டத் திருத்த மசோதா, 1986
### (Indian Postal Act Amendment Bill, 1986)

இந்தியத் தபால் சட்டத் திருத்த மசோதா தனியார் தபாலையும் இடை நிறுத்திப் பிரித்துப் பார்ப்பதற்கான அதிகாரத்தை அரசாங்கத்துக்கு அளித்தது. பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடை செய்யும் நோக்கத்துடன் இந்த சட்டம் திருத்தம் செய்யப்படுவதாக அரசாங்கத் தரப்பில் கூறப்பட்டது. எனினும் தனிநபரின் அடிப்படை உரிமையில் குறுக்கிடும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோதப் போக்கை எதிர்க் கட்சிகளும், பத்திரிகைகளும் கடுமையாக கண்டித்தன. இந்த மசோதா ராஜீவ் காந்தியின் அதிகாரத் துஷ்பிரயோகமாகச் சித்தரிக்கப்பட்டது. 'கருப்பு மசோதா' (Black Bill) வாகக் கருதப்பட்டது. குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங் அம்மசோதாவில் கையொப்பமிட மறுத்து விட்டார் (1987 ஜனவரி). குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதால் கையொப்பமிடவில்லை என்ற விளக்கமளித்தார். குடியரசுத் தலைவரின் செயல் பிரதமர்– குடியரசுத் தலைவர் தொடர்பில் விரிசலை ஏற்படுத்தியது. அது ராஜீவ் காந்தியின் செல்வாக்கைப் பாதித்தது.

## பிரதமரின் பிரச்னைகள்

### பிரதமர்–குடியரசுத் தலைவர் தொடர்புப் பிரச்னை, 1986–87

இந்தியத் தபால் சட்டத் திருத்த மசோதாவில் குடியரசுத் தலைவர் கையொப்பமிட மறுத்ததின் விளைவாகப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்குக்குமிடையேயான தொடர்பு மோசமாயிற்று. இருவருக்குமிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றலாயின. ராஜீவ் காந்தி அதிகாரப்பூர்வமான தகவல்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டார். அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் கூட அவருக்கு அனுப்பப்படுவதில்லை என்று கூறப்பட்டது. ராஜீவ் காந்தி ஜெயில்சிங்கை சந்திப்பதையும் தவிர்த்து வந்தார். 1987 மார்ச் 9 ஆம் தேதியிட்ட குடியரசுத் தலைவர் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில்பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்குமிடையே உள்ள தொடர்பு பற்றி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இத்தொடர்பு பற்றி நன்கு நிலைநாட்டப்பட்ட மரபுகளும் நம் நாட்டில் உருவாகி உள்ளன. அப்படியிருக்கையில் இரண்டாண்டுகளாக இம்மரபுகள் பின்பற்றப்படவில்லை. எனவே பிரதமர் ராஜீவ் காந்தி அரசியலமைப்புச் சட்டத்தின் உணர்வு மற்றும் சரத்துக்களின் படி செயல்படுகின்றாரா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.."

குடியரசுத் தலைவரின் 'தனிப்பட்ட கடிதம்' 1987 மார்ச் 13 ஆம் தேதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டின் முதல் பக்கத்தில் பிரதானமாக வெளியிடப்பட்டது. குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் இக்கடிதத்தின் மூலம் பிரதமர்–குடியரசுத்தலைவர் தொடர்பு விவகாரத்தை அரசியலமைப்புச் சட்டப் பிரச்னையாக்கிவிட்டார். இந்த விவகாரம் இந்தியாவின் இரண்டு முக்கிய அரசியலமைப்புச் சட்டத் தலைவர்களுக்கிடையேயான உறவை மேலும் சிக்கலாக்கிவிட்டது. பிரதமருக்கும் குடியரசுத் தலைவருக்குமிடையே எழுந்த தொடர்புப் பிரச்னையை எதிர்க்கட்சியினரும், காங்கிரஸ் அதிருப்தியாளர்களும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர். பிரதமர்–குடியரசுத் தலைவர் தொடர்பில் பின்னடைவு ஏற்பட்டது.

குடியரசுத் தலைவரின் கடிதத்தை வெளியிட்டதையடுத்து மத்திய புலனாய்வுத் துறை (Central Bureau of Investigation) யினர் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிறுவனத் தலைவர் ராம்நாத் கோயங்கா வீட்டைச் சோதனையிட்டனர். இந்தியன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் நிதி ஆலோசகர் எஸ்.குருமூர்த்தி கைது செய்யப் பட்டார். இந்தியன் எக்ஸ்பிரஸ் அலுவலகம் சோதனைக்குள்ளாயிற்று. சி.பி.ஐ. நடவடிக்கையின் விளைவாக இந்தியன் எக்ஸ்பிரசின் டெல்லி பதிப்பு 117 நாட்களுக்கு வெளியிட முடியாமல் போயிற்று. மத்திய புலனாய்வுத் துறையின்நோக்கும் போக்கும் சந்தேகத்துக்கிடமாயிற்று. பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதற்காக சி.பி.ஐ. பயன்படுத்தப்படுகிறது என்ற எண்ணம் எழுந்தது. புலனாய்வுத் துறையின் நடவடிக்கை ராஜீவ் காந்தியின் பழிவாங்கும் போக்கைக் காட்டிக் கொடுப்பதாகப் பத்திரிகைகள் சித்தரித்தன. மத்திய புலனாய்வுத் துறை அரசியல் ஆதாயத்துக்காக அரசாங்கக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற கருத்து மக்களிடையே பரவிற்று.

**பேர்பாக்ஸ் விவகாரம் (Fairfax Controversy)**

1986 ஆண்டுத் துவக்கத்தில் தொழிலதிபர் திருபாய் அம்பானியின் ரிலையன்ஸ் தொழில் நிறுவனம் சட்டப்புறம்பாக அந்நியச் செலாவணி மோசடி செய்து தேவையான பொருள்கள் இறக்குமதி செய்வதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் கட்டுரைகள் வெளியாயின. அது மட்டுமல்ல. அக்கம்பெனி இந்திரா காங்கிரசுக்கு நிதியுதவி செய்வதாகவும் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் கூறினார் இந்தியன் எக்ஸ்பிரஸ், நிறுவனத்துக்கு நிதி ஆலோசகராக இருந்த எஸ்.குருமூர்த்தி. நிதி அமைச்சராக இருந்த வி.பி.சிங் ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு எதிராகக் கூறப்பட்ட புகார்களை விசாரிக்குமாறு **அமெரிக்க பேர்பாக்ஸ் நிறுவனத்தை** (Fairfax group)க் கேட்டுக் கொண்டார். அந்நிறுவனம் வர்த்தக நிறுவனங்களின் நடவடிக்கைகளைப் பற்றித் துப்பறியும் பணியைச் சிறப்பாகச் செய்து வந்தது. தன்னைக் கலந்து ஆலோசிக்காமல் ஓர் அமெரிக்கக் கம்பெனியை அமர்த்தியது பற்றிக் கோபம் கொண்ட ராஜீவ் காந்தி வி.பி.சிங்கை நிதி அமைச்சகத்திலிருந்து பாதுகாப்பு அமைச்சகத்துக்கு மாற்றிவிட்டார். கோபத்தில் எடுக்கப்படும் எந்த முடிவும் சரியாக இருக்காது. ராஜீவ் காந்தி வி.பி.சிங்கை நிதி அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்கியது தன்னைத்தானே அடித்துக் கொள்வதற்குச் சமமானது. வி.பி.சிங்கை நீக்கியது நாணயமற்ற தொழிலதிபர்கள் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கொண்டிருந்த செல்வாக்கை உறுதிபடுத்துவதாக கருதப்பட்டது.

**நீர் மூழ்கிக் கப்பல் பேரம்**

1987 ஜனவரிமாதம் வி.பி.சிங் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு மாற்றப்பட்டார். அதுவரை ராஜீவ் காந்தி பாதுகாப்புப் பொறுப்பையும் வகித்து வந்தார். வி.பி.சிங்

பாதுகாப்பு அமைச்சரான அடுத்த மாத மத்தியில் மேற்கு ஜெர்மன் கம்பெனி (Howaldtsueerke Detsche werft)யிலிருந்து 4 நீர் மூழ்கிக் கப்பல்களை வாங்கியதில் ஊழல் நடந்திருப்பது தெரியவந்தது. இந்த நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் பிரதமர் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் நடைபெற்றன (1980). அப்போது இந்திரா காந்தி பிரப்பித்த உத்தரவின்படி 1) பாதுகாப்பு வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு இடைத்தரகர்களை நியமிக்கக் கூடாது; 2) கம்பெனி கொடுக்கும் 'கமிஷனை' ஒப்பந்த தொகையிலிருந்து கழித்து கொள்ள வேண்டும். இந்திரா காந்தி அப்படிச் செய்ததின் மூலம் தரகர்களுக்குக் கிடைத்துவந்த பணம் அரசாங்கத்துக்குக் கிடைக்க வழி செய்தார். அதன்படி 1983 ஆம்ஆண்டு 300 மில்லியன் டாலர்மதிப்புக்கு 4 நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

வி.பி.சிங் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பேற்ற பின் நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கியதில் விதிகள் மீறப்பட்டு 7 விழுக்காடு அதாவது 21 மில்லியன் டாலர் ஒரு இந்திய இடைத் தரகருக்குக் கொடுக்கப் பட்டது தெரிய வந்தது. அத்தொகை 1980 லிருந்து 1987 வரைத் தவணைகளாகக் கொடுக்கப்பட்டிருந்தது. 1984 லிருந்து 1987 ஜனவரி வரைப் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த ராஜீவ் காந்திக்குத் தெரியாமல் ''கமிஷன் கைமாறல்'' நடந்திருக்க முடியாது என்ற சந்தேகம் ஏற்படலாயிற்று. எந்த ஒரு தனி மனிதரும் இவ்வளவு பெரிய தொகையைத் தன் சொந்தக் கணக்கில் வைத்துக் கொள்ள முடியாது. எனவே, அந்தக் கமிஷன் தொகை காங்கிரசுக்கோ அல்லது இந்திரா காந்தி குடும்பத்துக்கோ கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற ஊகம் வலுப்பெற்றது. ராஜீவ் காந்தி சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு பதில் வி.பி.சிங்கை விசாரணை வலையில் சிக்க வைப்பதில் குறியாக இருந்தார். 1987 ஏப்ரல் 12 ஆம் தேதி வி.பி.சிங் பாதுகாப்பு அமைச்சர்பதவியை ராஜினாமா செய்தார். மக்கள் மதிப்பீட்டில் வி.பி.சிங் உயர்ந்தார்; ராஜீவ் காந்தி தாழ்ந்தார்.

**போபர்ஸ் பீரங்கி பேரம்**

நீர்மூழ்கிக் கப்பல்பேர ஊழல் பற்றிய புகார்கள் கிளப்பிய புழுதி அடங்குவதற்குள் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் கோடை இடி போல் விழுந்தது. சுவீடன் நாட்டின் மிகப் பெரிய பீரங்கித் தயாரிப்பு நிறுவனங்களில் (Nobel Industries) **போபர்ஸ்** (Bofors) கிளைக் கம்பெனி போர் பீரங்கிகளைத் தயாரித்துக் கொண்டிருந்தது. பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் போபர்ஸ் பீரங்கிகள் வாங்குவது பற்றிய பேச்சுவார்த்தை துவங்கியது (1977). பின்னர் ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் போபர்ஸ் பீரங்கிகள் வாங்க முடிவு செய்தார். போபர்ஸ் கம்பெனியிடமிருந்து 400 **ஹோவிட்சர்** பீரங்**கிகள்** வாங்குவதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அப்பீரங்கிகளின் அப்போதய விலை 11.3 பில்லியன் டாலர்கள்.

இந்த ஒப்பந்தத்துக்கு, ஏற்பாடு செய்தமைக்காக இந்திய அரசியல்வாதிகளும், பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் போபர்ஸ் கம்பெனியிடமிருந்து **கையூட்டுகள்** (Kick-backs) பெற்றுக் கொண்டதாக **ஸ்வீடன் தேசிய வானொலி** அறிவித்தது (1986 ஏப்ரல் 16) அதுமட்டுமல்ல. போபர்ஸ் நிறுவனம் 5 மில்லியன் டாலர்கள் கையூட்டுத் தொகையை **'தாமரை'** (Lotus) என்ற இரகசிய எண்ணில் ஸ்விட்சர்லாந்து வங்கியில் (Schweisisherre Bankverein) செலுத்திய தகவலையும் அந்த வானொலி தந்தது. ராஜீவ் காந்தி பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது 'போபர்ஸ் ஒப்பந்தம்' செய்யப்பட்டதால் அவர் ஊழல் புகாரின் குவிமையமானார். போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் சமகால இந்திய வரலாற்றில் நீங்காத மிகப் பெரிய ஊழலாக சித்தரிக்கப்பட்டது.

1986 ஏப்ரல் மாத இறுதியில் ஸ்வீடன் அரசாங்கம் **ஸ்வீடன் தேசிய தணிக்கை நிறுவனத்தை** (Swedish Audit Bureau) இந்த பீரங்கி பேரம் விவகாரம் பற்றிப் புலனாய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு பணித்தது. அந்த நிறுவனம் ஜூன் மாதம் சமர்ப்பித்த அறிக்கையில் 1) ராஜீவ் காந்தி அரசாங்கத்துக்கும் போபர்ஸ் நிறுவனத்துக்குமிடையே நடைபெற்ற பேரத்தின்போது 'இடைத்தரகர்களுக்'கு 'கமிஷன்' கொடுப்பது பற்றிய ஏற்பாடு இருந்தது என்றும்; 2) அதன்படி போபர்ஸ் கம்பெனி கமிஷன் கொடுத்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள் பொதுவாக அறிவிக்கப்பட்டன.

ஸ்வீடன் தேசிய தணிக்கை நிறுவனம் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கும் போது ராஜீவ் காந்தி சுவிட்சர்லாந்துக்கு ஒரு கமிஷனை அனுப்பினார். அவரது நோக்கம் சுவிஸ் வங்கியில் யார் பெயரிலாவது இரகசியக் கணக்கில் பீரங்கி பேரக் கையூட்டுப் பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இருக்கக்கூடும் என்று அனுமானிக்கப்பட்டது. சுவிட்சர்லாந்து அரசாங்கமும் இதுபற்றி விசாரிக்க அரசாங்க வக்கீலை (Public Prosecutor) நியமித்தது.

போபர்ஸ் நிறுவனம் யாருக்காவது கமிஷனோ அல்லது கையூட்டோ கொடுத்ததா என்பதை நேரடியாகக் கேட்காமல் ராஜீவ் காந்தி ஏன் சுவிஸ் வங்கிக் கணக்கைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டது. பிரதமர் ராஜீவ் காந்தி எதையோ அல்லது யாரையோ மறைக்க முயல்கிறார் என்ற எண்ணத்தைப் பத்திரிகைகள் பலமாக ஏற்படுத்தின. எனினும் ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்தில் அவரோ அல்லது அவரது குடும்பத்தினரோ போபர்ஸ் நிறுவனத்திடமிருந்து எந்த விதமான சலுகையையும் பெறவில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தார். 1984 பிப்ரவரி மாதம் போபர்ஸ் விவகாரம் பற்றி விசாரணை செய்த தாக்கர் **கமிஷன்** (Thakkar Commission) அதன் அறிக்கையை சமர்ப்பித்தது. அந்த அறிக்கை ஊழல் புகார் பற்றிய சர்ச்சையை மேலும் சிக்கலாக்கியது. பேர்பாக்ஸ் விவகாரமும், ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல் பேர ஊழல் புகாரும், போபர்ஸ் பீரங்கி ஊழல் குற்றச்சாட்டும் 'திருவாளர் பரிசுத்த'த்தின் பெயருக்கும் பெருமைக்கும் கறையையும் களங்கத்தையும் ஏற்படுத்தின. ஊழல் புகார்களின் விளைவுகளுக்குப் பிறரை நிந்திக்கும் போக்கு பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசியல் மனமுதிர்வின்மையை வெளிப்படுத்துவதாக இருந்தது. 'பிறரைவிட நான் புனிதமானவன்' என்ற அவரது மனப்பான்மை தன்மூப்புடைய தகா நெஞ்சமுத்தமாகக் கருதப்பட்டது. ராஜீவ் காந்தி ஆர்வத்திலிருந்து இயலாமைக்கும், இயலாமையிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு முற்றுகைக்குட்பட்ட நிலையை அடைந்தார் என்று குறிப்பிட்டுள்ளார் அருண் ஷோரி.

### சரிவின் அறிகுறிகள்

#### இடைக்கால தேர்தல்கள், 1987

1984 நாடாளுமன்றத் தேர்தலில் அசாதாரண வெற்றி பெற்ற காங்கிரஸ் 1985 இடைத் தேர்தலில் கர்நாடகம், பஞ்சாப், அஸ்ஸாம் மாநிலங்களில் தோல்வி கண்டு 1987 இல் மேற்கு வங்காளம், கேரளா, ஜம்மு–காஷ்மீர் மாநில இடைத்தேர்தல்களில் தோல்வியைத் தழுவியது. வழக்கத்துக்கு மாறாக ராஜீவ் காந்தி மேற்கு வங்காளத்தில் ஜோதி பாசுவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தும் காங்கிரஸ் தோல்வி கண்டது. இந்திரா காங்கிரஸ் மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலும் படுதோல்வி அடைந்தது. 1987 இடைக்காலத் தேர்தல் முடிவுகள் ராஜீவ் காந்தி அவை அடங்கத் தொடங்கியதன் அறிகுறியாகும்.

### குடியரசுத் தலைவர் தேர்தல், 1987

குடியரசுத் தலைவர் கியானி ஜெயில் சிங்கின் பதவிக் காலம் 1987 ஜூலை மாதத்தோடு முடிந்தது. எனவே புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ராஜீவ் காந்தி ஜெயில் சிங்குக்கு பதில் வேறு ஒருவரைக் குடியரசுத்தலைவராக்க விரும்பினார். ஜெயில் சிங் ராஜீவ் காந்தியைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்க முடியுமா என்பது பற்றிச் சட்ட ஆலோசனையை நாடினார். எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு மீண்டும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்புகளைப் பரிசீலித்தார். எதிர்க்கட்சிகள் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வி.கிருஷ்ண ஐய்யரைத் தங்களது வேட்பாளராக அறிவித்தனர். காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தியின் ஆதரவைப் பெற்ற **துணைக் குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன்** குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும் ராஜீவ் காந்தி–ஜெயில் சிங் உறவில் ஏற்பட்ட விரிசல் ராஜீவ் காந்தியின் செல்வாக்குச் சரிவுக்கான அறிகுறியாகும்.

### அரியானா தேர்தல், 1987

1987 ஜூன் மாதம் 20,22 தேதிகளில் அரியானாவில் நடைபெற்றது. அத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறுவதைக் கவுரவப் பிரச்னையாகக் கருதினார் ராஜீவ் காந்தி. அவரே நேரில்சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தார். அரியானா முதலமைச்சர் பன்சி லால் காங்கிரஸ் வெற்றியை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். அரியானா தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் முனைப்புடன் செயல்பட்டன. குறிப்பாக லோக் தளத் தலைவர் தேவிலால் மத்திய அரசாங்கத்தின் ஊழல்கள் பற்றித் தீவிர பிரச்சாரம் செய்தார். "வெளி நாட்டு மனைவி, வெளி நாட்டுப் பணம், வெளி நாட்டு வங்கி வேண்டாம்" என்ற கோஷத்தைக் கிளப்பினார். அரியானா தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி கண்டது. ராஜீவ் காந்தியின் ஆளுமைக் கவர்ச்சி (Charisma) அரியானா மக்களைக் கவரவில்லை.

### அதிருப்தியாளர்கள் அதிகரிப்பு

ராஜீவ் காந்தியின் அவசர, ஆத்திர, ஆவேச நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்தோரின் எண்ணிக்கை பெருகிற்று. அவர்கள் கட்சிமாறல் சட்டத்துக்கஞ்சி கட்சிமாறாமல் இருந்தனர். **அருண் நேரு, வி.சி.சுக்ளா, அரீப்முகமது கான்** போன்ற ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பர்கள் கூட அதிருப்தியடைந்தனர். அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கினார் ராஜீவ் காந்தி. மற்றொரு ராஜீவ் காந்தி விசுவாசியான **அருண் நேருவும்** ராஜினாமா செய்தார். 1987 ஏப்ரல் மாதம் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, காங்கிரஸ் கட்சியில் இருந்த **வி.பி.சிங்கும்** ராஜினாமா செய்தார். இவையாவும் ராஜீவ் காந்தி மக்களிடையேயும், காங்கிரஸ்காரர்களிடேயும் மதிப்பையும் செல்வாக்கையும் இழந்து வந்ததற்கான அறிகுறிகளாகும்.

### பாபர் மசூதிப் பிரச்னை, 1989

ராஜீவ் காந்தி பிரதமரானவுடன் இந்து தீவிரவாதிகள் பாபர் மசூதி இருக்கும் இடத்தில் ராமர்கோயில் கட்ட வேண்டும் என்ற புதுக் கோரிக்கையை எழுப்பினார் (1986). அக்கோரிக்கையை பாரதீய ஜனதா கட்சி (பி.ஜே.பி) ஆதரித்தது. ஆத்திரமடைந்த முஸ்லீம்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். இதற்கிடையே ஒரு மாவட்ட நீதிபதி பாபர் மசூதி வளாகத்தில் இந்துக்களும் வழிபட அனுமதிக்கப்பட வேண்டும் என்று

தீர்ப்பளித்தார். 1986 பிப்ரவரி மாதத்துக்குப் பிறகு முஸ்லிம்கள் பாபர் மசூதியை இந்துக்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்று கோரி போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர்.பி.ஜே.பி.யும் அதன் தோழமை அமைப்புகளும் அயோத்தியில் ராமர்கோயில் கட்டுவதற்கு ஆதரவாகத் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

1989 செப்டம்பர் 30 ஆம் தேதி விஸ்வ இந்து பரிஷத் **ஷிலா பூஜை** (Shila Puja) க்கு ஏற்பாடு செய்தது. அதாவது 2000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் 'ஸ்ரீராம்'' என்ற பெயர் பதித்த செங்கற்களைத் தயாரித்து அயோத்திக்குக் கொண்டு வந்து ராமர்கோயில் கட்டுவதற்கு அடித்தளம் அமைத்தனர் (நவம்பர் 9). பாபர் மசூதிக்கு 192 அடி தள்ளி அஸ்திவாரம் போடப்பட்டது. **ராஜீவ் காந்தி மதவாதம் என்ற முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்டத் தவறி விட்டார்.** அதன் விளைவாக மதவாத மரம் காழ்ப்பு ஏறி முதிர்ந்து பின் வந்த பிரதமர்களின் கைகளைக் காயப்படுத்தி விட்டது. ''இளைதாக முள்மரம் கொல்க; களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து'' (குறள், 879).

## ஜனநாயக அதிகாரப் பரவல் (Democratic Decentratlisation)

### புல்லிதழ் ஜனநாயகம் (Grass-root Directory)

நேருவின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயக அதிகாரப் பரவல் அடிப்படையில் பஞ்சாயத்து ராஜ்ய உள்ளாட்சி முறை அறிமுகப் படுத்தப்பட்டது (1959). ஆனால் அத்திட்டம் அதிகார வர்க்கத்தின் இரும்புப்பிடிக்குள் சிக்கி மக்கள் பங்கேற்பின்றித் தேக்க முற்றது. இந்திரா காந்தி ஆட்சிக்கால அதிகாரக் குவியல் முறையில் கிராமத்துப் புல்லிதழ் ஜனநாயகம் நலிவடைந்தது. ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் நேரு துவக்கிய புல்லிதழ் ஜனநாயக அதிகாரப் பரவல் முறைத் திட்டம் புத்துயிர்பெற்றது. மத்திய மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் உதவி 5 1/2 இலட்சம் கிராமங்களில் உள்ள 900 மில்லியன் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை அறிந்த ராஜீவ் காந்தி இந்தியாவின் அரசியல் அடித்தளத்தைப் பலப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். உள்ளாட்சி அமைப்புகளை கிராம அதிகார மையங்களாக உருவாக்க விரும்பினார். எனவே, 25 இலட்சங்கள் கிராம மற்றும் நகராட்சிப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பை உறுதி செய்து புல்லிதழ் பிரதிநிதித்துவ அரசாங்க முறையை உறுதி செய்வதில் தனிக்கவனம் செலுத்தினார் ராஜீவ் காந்தி.

### சிங்வி கமிட்டி (The Singhvi Committee)

1987 ஆம் ஆண்டு முடங்கிக்கிடந்த பஞ்சாயத்து ராஜ்ய நிறுவனங்களைப் புதுப்பிப்பது பற்றிப் பரிசீலிப்பதற்காக **டாக்டர் எல்.எம்.சிங்வியைத்** தலைவராக கொண்ட ஆய்வுக் கமிட்டியை நியமித்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. அக்கமிட்டி பஞ்சாயத்து நிறுவனங்களின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து அவற்றை உயிர்ப்பிப்பதற்காகப் பின்வரும் **பரிந்துரைகளைச்** செய்தது; 1) கிராமப் பஞ்சாயத்துக்களைத் திறம்படச் செயல்படத்தக்கவாறு மறுசீரமைத்தல்; 2) உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிக நிதி ஆதாரங்களையும், அதிகாரங்களையும் அளித்தல்; 3) உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய தகராறுகளைத் தீர்க்க மாநில அளவில் நீதிமன்ற விசாரணை அமைப்பை (Judicial Tribunal) ஏற்படுத்தல்; 4) பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தில் அங்கீகாரம் அறிவிக்கப்பட வேண்டும்.

## 64 வது அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா

பிரதமர் ராஜீவ் காந்தி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பஞ்சாயத்து உள்ளாட்சி நிறுவனங்களுக்கு 'உயிர்ப்பிச்சை' அளிக்கத் தீர்மானித்தார். அவர் அனைத்து முதலமைச்சர்களுக்கும் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு கூறினார். 'பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புகளை ஆரம்பித்தபோது இருந்த ஆர்வம் பலமாநிலங்களில் அருகி நலிந்துவிட்டது. உரிய காலத்தே அவைகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை. பஞ்சாயத்துப் புனரமைப்பில் மாநில அரசாங்கங்கள் அக்கறை காட்டாவிடில் மத்திய அரசாங்கம் தலையிட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கத் தயங்காது''.

ராஜீவ் காந்தியின் எண்ணத்துக்கேற்ப 64வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார். அச்சட்டத் திருத்தம்துணிகரமான தொலை நோக்குடைய நடவடிக்கையாகும். ஏனெனில் பஞ்சாயத்து அமைப்புமுறையை **அரசியலமைப்புச் சட்டமயமாக்கும்** (Constitutionalising the Panchayat Structure) முயற்சி அது. புரட்சிகரமான அச்சட்டத்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்ற மக்களவை ஒப்புதல் அளித்தது. ஆனால் எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த மாநிலங்கள் அவை அம்மசோதாவுக்கு அங்கிகாரம் அளிக்க மறுத்துவிட்டது. எனவே, 64வது சட்டத்திருத்த மசோதா ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் சட்ட வடிவம் பெறவில்லை. பின்னர் அதே மசோதா சில மாற்றங்களுடன் பிரதமர் பி.வி.நரசிம்மராவால் கொண்டு வரப்பட்டு நாடாளுமன்றத்தால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிராம மறுமலர்ச்சிக்காகப் புல்லிதழ் ஜனநாயக அதிகாரப் பரவல் முறை அமைப்பைப் புதுப்பித்ததற்கான பெருமை பிரதமர் ராஜீவ் காந்தியைச் சேரும். இதை ராஜீவ் காந்தியின் தனிப்பெரும் சாதனையாகக் கருதலாம்.

## பொதுத் தேர்தல், 1989

ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் இரண்டாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 1989 நவம்பர் மாதம் நடைபெற்றது. 1984 பொதுத் தேர்தலின்போது இந்திரா காந்தி அனுதாப அலை வீசியது. 1989 தேர்தலின் போது ராஜீவ் காந்தி ஊழல் புகார் சூறாவளி சுழன்றடித்தது. இத்தேர்தல் ஊழல் குற்றச்சாட்டை முன்னிறுத்திய வி.பி.சிங்குக்கும் ஊழல்குற்றச்சாட்டுக்குள்ளான ராஜீவ் காந்திக்கும் இடையே நடைபெற்ற நேரடிப் போட்டியாகக் கருதப்பட்டது. 1988 ஜூன் மாதம் நடந்த அலகாபாத் மக்களவை இடைத்தேர்தலில் ஊழல் பிரச்னையை தேர்தல் பிரச்சாரமாக்கி வி.பி.சிங் மகத்தான வெற்றி பெற்றார். செப்டம்பர் 6 ஆம் தேதி பிரதமர் ராஜீவ் காந்தி பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதாகக் கூறி இந்தியப் பத்திரிகையாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். 1989 இறுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ஊழல் பிரச்னை நாட்டின் பிற பொருளாதார, சமூகப் பிரச்னைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. திருவாளர் பரிசுத்தமாக அரசியல் பிரவேசம் செய்த ராஜீவ் காந்தி 'ஊழல் சக்கரவர்த்தி' என்று சித்தரிக்கப்பட்டார். நாட்டு மக்கள் ராஜீவ் காந்தியின் நம்பகத்தன்மை (Credibility)யை சந்தேகித்தனர். எனவே, 1989 பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மோசமான தோல்வியைத் தழுவியது. மக்களவைக்கான 549 இடங்களில் காங்கிரசால் 197 இடங்களையே பெற்றது. வி.பி.சிங்கின் ஜனதா தள சோஷலிஸ்டுகள் 142 இடங்களைப் பிடித்தனர். வி.பி.சிங் சந்தர்ப்பவாதக் கட்சிகளின் ஆதரவோடு சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தார்.

## மதிப்பீடு

ராஜீவ் காந்தி வரலாற்றால் உருவாக்கப்பட்டவர். வரலாற்றை உருவாக்க முயன்றவர். அறிவியல்–தொழில் நுட்பப் புரட்சியின் துணைகொண்டு இந்தியாவை நவீனமயமாக்குவதில் ஆர்வம் கொண்டவர். புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் இந்தியப் பொருளாதாரத்தைத் தாராளமயமாக்கி உலகப் போட்டிப் பொருளாதார நீரோட்டத்தில் சேர்க்க முனைந்தவர். அஸ்ஸாம் பிரச்னைக்கு அமைதித் தீர்வு கண்டார். ராஜீவ் காந்தி–லோங்கோவால் உடன்பாடு சிக்கல்மிக்க பஞ்சாப் பிரச்னைக்குக் காணப்பட்ட துணிகரத் தீர்வாகும். புதிய கல்விக் கொள்கை ராஜீவ் காந்தியின் ஆக்கபூர்வமான பங்களிப்பாகும். அதேபோன்று அவரது பஞ்சாயத்து ஜனநாயக அதிகாரப் பரவல்முறை நடவடிக்கை பாராட்டுக்குரியது.

ராஜீவ் காந்திக்கு ஆர்வமும் அவசர உணர்வும் விரைவாக சாதிக்க வேண்டும் என்ற ஆத்திரமும் இருந்த அளவுக்கு அரசியல் அனுபவமும், மனமுதிற்சியும், விவேகமும் இல்லை. ஷாபானு வழக்கும், முஸ்லீம் பெண்கள் மசோதாவும் ராஜீவ் காந்தியின் உள்ள உறுதியின்மையை வெளிப்படுத்தின. இந்தியத் தபால் சட்டத்திருத்த மசோதா தவறான நேரத்தில் எடுக்கப்பட்ட தவறான முடிவாகும். ராஜீவ் காந்தியின் முற்போக்கு எண்ணத்துக்கு வடிவம் கொடுக்க முயன்ற வி.பி.சிங்கை நிதித்துறையிலிருந்து வெளியுறவுத்துறைக்கு மாற்றியது செயலுத்தித் தவறாகும். பிரதமர் – குடியரசுத் தலைவர் தொடர்புப் பிரச்னையை எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதமாக்கிக் கொண்டு ராஜீவ் காந்தியின் செல்வாக்கைக் குறைக்க முயன்றன.

பேர்பாக்ஸ் விவகாரம், நீர்மூழ்கிக் கப்பல் பேர விவகாரம், போபர்ஸ் பீரங்கி பேர விவகாரம், மற்றும் ராமஜென்மபூமி விவகாரம் ராஜீவ் காந்தியின் நம்பகத்தன்மையை வெகுவாகக் குறைத்துவிட்டன. இவை நம்பிக்கை நட்சத்திரமாகக் காட்சியளித்த ராஜீவ் காந்தி மக்களின் நம்பிக்கையை இழக்கக் காரணமாயிருந்தன. ராஜீவ் காந்தியின் பெயரில் அதிகாரவர்க்கம் ஆட்சி செய்தது என்ற எண்ணம் ஏற்பட்டது. யாவற்றுக்கும் மேலாக தவிர்த்திருக்க வேண்டிய இந்தியா இலங்கை ஒப்பந்தம் ராஜீவ் காந்தியின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. சுருங்கக்கூறின், நேரு–காந்தி பரம்பரை ஆட்சியை நிலைநாட்டு வதற்காகத் திணிக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலம் இந்தியாவை இருபத்தியோராம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட அரைகுறை முயற்சியாகும்.

# 1.3 ராஜீவ் காந்தியின் வெளியுறவுக் கொள்கை

> ராஜீவ் காந்தி அவரது ஆட்சிக் காலத்தில் தன்னைச் சுற்றியிருந்த உலகின் சிக்கல்களை சமாளிக்கக்கூடிய தற்திறமையை நிரூபித்துக் காட்டினார்.
>
> – ஜே.என்.தீக்ஷித்

## அணிசேரா இயக்கம்

### புது டெல்லி பிரகடனம், 1985

பிரதமர் ராஜீவ் காந்தி நேரு மற்றும் இந்திரா காந்தியின் வழி சென்று பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையிலான கூட்டுசேராக் கொள்கையைத் துடிப்புடன் தொடர்ந்தார். 1985 ஜனவரி 28 ஆம் தேதி புது டெல்லியில் ஆறு நாடுகளின்–இந்தியா, அர்ஜெண்டினா, கிரீஸ், மெக்சிகோ, சுவீடன்–**அணிசேரா படைக்குறைப்பு உச்ச மாநாடு** (Non-aligned summit on Disarmament) ஒன்றைக் கூட்டினார். அணு ஆயுதப் படைக் குறைப்பு மாநாட்டு விவாதத்தின் மையப் பொருளாக இருந்தது. அம்மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய ராஜீவ் காந்தி பின்வரும் 4 அம்சத் திட்டத்தை மாநாட்டின் பரிசீலனைக்கு வைத்தார்:

1. அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதையும் உபயோகிப்பதையும் தடை செய்தல்.
2. அணு ஆயுத இருப்பைக் குறைத்தல்.
3. அணு ஆயுதப்படை குறைப்பு பற்றி உடன்பாடுகளை அனைத்து அணு ஆயுத நாடுகளையும் ஏற்கச் செய்தல்.
4. அணு ஆயுதங்களை அடியோடு அகற்றி விட வேண்டும் என்ற குறிக்கோளுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளல்.

ராஜீவ் காந்தியின் 4 அம்சத்திட்டத்தின் அடிப்படையில் அணு ஆயுதப் படைக்குறைப்பு பற்றிய **புது டெல்லிப் பிரகடனம்** (New Delhi Declaration on Nuclear Disarmament) வெளியிடப்பட்டது. புதுடெல்லிப் பிரகடனத்துக்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதில் முனைப்புடன் செயல்பட்டார் ராஜீவ் காந்தி. அவர் 1985 மே மாதம் சோவியத் யூனியனுக்கும், ஜூன் மாதம் அமெரிக்காவுக்கும் பயணம் செய்த போது புது டெல்லி பிரகடனம் பற்றி அந்நாடுகளின் தலைவர்களுடன் பேசினார். ரஷ்ய–அமெரிக்கத் தலைவர்கள் புதுடெல்லி பிரகடனத்தை வரவேற்றதோடு அதை நடைமுறைப் படுத்துவதற்கான ஒத்துழைப்பையும் கொடுப்பதாக உறுதி கூறினார். அதுமட்டுமல்ல, இருநாடுகளும் ஜெனீவா பேச்சு வார்த்தையைத் துவக்குவதற்குச் சாதகமான

சூழ்நிலையை உருவாக்குவதில் ராஜீவ் காந்தி பெரும் பங்கு வகித்தார். 1986-ல் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் படைக்குறைப்பு உச்ச மாநாட்டில் கலந்து கொண்டு படைக்குறைப்பின் இன்றியமையாமையை வலியுறுத்தினார். அணு ஆயுதப் படைக்குறைப்புக்கு இணங்கியது ராஜீவ் காந்தியின் படைக்குறைப்பு ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

## ஹராரே உச்ச மாநாடு, 1986

அணி சேரா நாடுகளின் 8வது உச்ச மாநாடு 1986 செப்டம்பர் 1 முதல்6 ஆம் தேதி வரை ஜிம்பாப்வே தலைநகர் ஹராரே (Harare) யில் நடைபெற்றது. அம்மாநாட்டில் 101 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தென்னாப்பிரிக்காவின் இனக் கொலையும் அதற்கெதிரான நடவடிக்கைகளும் விவாதப் பொருளாக இருந்தது. அம்மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் ராஜீவ் காந்தி மூன்றாம் உலக வளரும் நாடுகளின் உலகத் தகவல் தொடர்பு முறையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். அப்போதுதான் மேலை நாடுகளின் தகவல் தொடர்பு முறையால் எற்படும் தவறுகளையும் திரிபுகளையும் திருத்த முடியும் என்றார். 1987 ஜூலை 24,25 தேதிகளில் புது டெல்லியில் இனஒதுக்கக் கொள்கைக்கு எதிரான **ஆப்பிரிக்க நிதி** (The African Fund) பற்றிய 9 நாடுகளின் கூட்டம் ராஜீவ் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஆப்பிரிக்க நிதி பற்றிய செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது.

## பெல்கிரேடு உச்ச மாநாடு, 1989

அணி சேரா நாடுகளின் 9வது உச்ச மாநாடு 1989 செப்டம்பர் மாதம் யூகோஸ்லாவியாவின் தலைநகர் **பெல்கிரேடில்** (Belgrade) நடைபெற்றது. அம்மாநாட்டில் உலக அமைதி, படைக்குறைப்பு, தகராறுகளை அமைதி வழித் தீர்த்தல், இனக் கொள்கை, உலகப் பொருளாதார உறவுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. பெல்கிரேடு உச்ச மாநாட்டில் பங்கேற்று பிரதமர் ராஜீவ் காந்தி ஆற்றிய எழுச்சியுரை அணிசேரா நாடுகளின் இயக்கம் செல்ல வேண்டிய திசை பற்றிய தெளிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. அணிசேரா இயக்கத்தின் 15 நாடு களைக் கொண்ட **தெற்கு–தெற்கு குழு** (South-South Group) வில் இந்தியா இடம் பெற்றது. அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் கானா (Ghana) வில் நடைபெற வேண்டும் என்ற முடிவுக்கு இந்தியா காரணமாக இருந்தது.

## அயல் நாடுகளுடன் உறவு

## இந்திய – அமெரிக்க உறவு

ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் இந்திய–அமெரிக்க உறவில் விரும்பத்தகு மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்குக் காரணம் ராஜீவ் காந்தியின் மேற்கத்திய நாகரிக நாட்டம், நவீன அறிவியல் தொழில் நுட்பத்தின் மீதான நம்பிக்கை, தாராளமயப் பொருளாதார ஆதரவு, இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற விழைவு ஆகும். 1985 ஜீன் மாதம் அமெரிக்காவுக்கு ஐந்து நாள் பயணம் செய்த ராஜீவ் காந்தி அமெரிக்க அதிபர் ரொனால்டு ரேகனுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையில் பயங்கரவாதம், அறிவியல்–தொழில்நுட்பப் பரிவர்த்தனை, தொற்றுநோய்த் தடுப்பூசித் திட்டம், ஆய்வு வளர்ச்சி பற்றிய நீண்டகாலத் திட்டம் இடம் பெற்றன. அப்பயணத்தின் விளைவாக இரு நாடுகளுக்குமிடையே உயர்தர தொழில் நுட்பம் பற்றிய உடன்பாடு ஏற்பட்டது. இந்திய இராணுவத்தை நவீனப்படுத்த அமெரிக்கா உதவுவதாக உறுதி அளித்தது.

சூப்பர்கம்யூட்டர் (Gray XMP 24) கொடுக்க முன் வந்தது. அதேபோன்று இந்தியா சிறிய போர்விமானங்கள் உற்பத்தி செய்ய அமெரிக்கா உதவி செய்ய முன்வந்தது.

1987 அக்டோபர் மாதம் ராஜீவ் காந்தி மீண்டும் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டார். அப்போது பாதுகாப்பு, அறிவியல், தொழிநுட்பம், விவசாயம், ஆராய்ச்சி, கல்வி பற்றி இரு நாடுகளும் ஒத்துழைப்பதாக முடிவாயிற்று. எனினும் 1) அமெரிக்கா தொடர்ந்து பாகிஸ்தானுக்கு அளித்து வந்த போராயுத உதவி; 2) பாகிஸ்தான் அணு ஆயுதத் திறனை அதிகரிப்பதைத் தடுக்காதது; 3) அமெரிக்கா இந்திய உதவியைக் குறைத்தது; 4) இந்தியாவின் அமைதி அணுத் திட்டத்தைப் பாகிஸ்தான் திட்டத்தோடு ஒப்பிட்டுப் பேசியது; 5) சூப்பர் 301 சட்டத்தைப் பயன்படுத்தி இந்தியாவை நியாயமற்ற வர்த்தக கூட்டாளி (Unfair Trade Partner) என்று அறிவித்தது போன்ற அமெரிக்க நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவைப் பாதித்தன.

**இந்திய–ரஷ்ய உறவு: 10 அம்சப் பிரகடனம்**

1985 மே மாதம் ராஜீவ் காந்தி ஆறு நாள் மாஸ்கோ பயணத்தை மேற்கொண்டார். அப்பயணத்தின் விளைவாக இரு நாடுகளுக்குகிடையே கடனுதவி, வர்த்தக அறிவியல் கூட்டுறவு பற்றி இருதரப்பு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. இந்திய–சோவியத் நட்புறவு மேலும் பலப்பட்டது. ராஜீவ் காந்தியின் மாஸ்கோ பயணத்தையடுத்து 1986 நவம்பர் மாதம் சோவியத் அதிபர் **மிக்கேல் கோர்பசேவ்** (Mikhail Gorbachev) இந்தியாவுக்கு வருகை தந்தார். அப்போது ஒரு புதிய **இந்திய–சோவியத் பொருளாதார–தொழில்நுட்பக் கூட்டுறவு உடன்பாடு** செய்து கொள்ளப்பட்டது. 1986 நவம்பர் 27 ஆம் தேதி பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் சோவியத் அதிபர் மிக்கேல் கோர்பசேவும் கையொப்பமிட்ட **இந்திய–சோவியத் 10 அம்சப் பிரகடனத்தை** (Indo-Soviet 10 Point Declaration) வெளியிட்டனர். 10 அம்சங்களாவன:

1. சமாதான சகவாழ்வு சர்வதேசத் தொடர்பின் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.
2. மனித வாழ்வின் மகத்துவத்தை உலக நாடுகள் உணர வேண்டும்.
3. அகிம்சையே சமூக வாழ்வின் அடிப்படை.
4. பரஸ்பரம் புரிந்து கொள்ளலும், நம்பிக்கையும் அச்சம் மற்றும் சந்தேகத்துக்கு மாற்றுகள்.
5. ஒவ்வொரு நாட்டின் அரசியல் மாற்றம் பொருளாதார சுதந்திரம் மதிக்கப்படுதல் வேண்டும்.
6. படை பெருக்கத்திற்கு செலவிடப்படும் வளங்கள், சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு மடைமாற்றம் செய்யப்படல் வேண்டும்.
7. தனிமனிதனின் இசைவான வளர்ச்சிக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
8. மனித இனத்தின் பொருள் மற்றும் அறிவு ஆற்றல்களை உலகப் பொதுப் பிரச்னைகளைத் தீர்க்கப் பயன்படுத்த வேண்டும்.
9. 'பயங்கரவாதச் சமநிலை' (Balance of Terror)க்குப் பதில் அகல் விரிவான சர்வதேசப் பாதுகாப்பு ஏற்பட வேண்டும்.
10. திட்டவட்டமான உடனடி படைக்குறைப்புத் திட்டத்தின் மூலம் அணு ஆயுதமற்ற அகிம்சை உலகை உருவாக்க வேண்டும்.

இந்திய–சோவியத் 10 அம்சப் பிரகடனம் மனிதாபிமான பட்டயமாகும். அப்பிரகடனம் "உலகம் ஒன்று; அதன் பாதுகாப்பை பிரித்துப் பார்க்க முடியாது" என்ற எண்ணத்தின் வெளிப்பாடாகும். இந்த பிரகடனம் சமகால சர்வதேசத் தொடர்புகளுக்கான உறுதியான அடிப்படையைக் கொடுத்தது. இது அணு ஆயுத மிரட்டலால் நெருக்கடிகளும் அமைதிச் சமநிலைச் சீர்கேடும் ஏற்படக் கூடாது என்பதை அடிக் கோடிட்டுக் காட்டியது. படைக்குறைப்பும் உலக அமைதி காத்தலும் பிரதிபலித்தது. ராஜீவ் காந்தி குறிப்பிட்டதைப் போன்று இந்திய–சோவியத் 10 அம்சப் பிரகடனம் 'இந்திய–சோவியத் உறவின் முக்கிய மைல்கள்' ஆகும்.

### கலாச்சாரக் கலை விழாக்கள்

பிரதமர் ராஜீவ் காந்தி **கலாச்சாரக் கலை விழாக்களை** (Cultural Festivals) இந்திய–சோவியத் நட்புறவை வளர்ப்பதற்கான வழியாகக் கருதினார். 1987 ஜூலை 3 ஆம் தேதி **இந்தியக் கலாச்சாரக் கலை விழா** மாஸ்கோவில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அதை மிக்கேல் கோர்பசேவும், ராஜீவ் காந்தியும் இணைந்து துவக்கி வைத்தனர். இக்கலை விழா சோவியத் ஒன்றியத்தின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்டது. அதே போன்று சோவியத் கலாச்சாரக் கலை விழாக்கள் இந்தியாவின் பல நகரங்களில் நடத்தப்பட்டன. இக்கலை விழாக்கள் இருநாட்டு நட்புறவு, வர்த்தகத் தொடர்பு, அறிவியல்–தொழில் நுட்பப் பரிவர்த்தனை, சர்வதேச உறவு பற்றிய கருத்துப் பரிமாற்றம் ஆகியவை பெருகவும் பலப்படவும் உறவுப் பாலங்களாக இருந்தன. இக்கலாச்சார கலை விழாக்கள் ராஜீவ் காந்தியின் ஆக்கபூர்வமான வெளியுறவு அணுகுமுறைக்கான எடுத்துக்காட்டாகும். இக்கலை விழாக்களைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்துக் கொண்டனர். 1988 நவம்பர் மாதம் கோர்பசேவ் மீண்டும் இந்தியாவுக்கு வருகை தந்தார். 1989 ஜூலை மாதம் ராஜீவ் காந்தி மாஸ்கோ சென்று ரஷ்ய அதிபரை எட்டாவது முறையாக சந்தித்து இருநாட்டு நட்புறவுத் திட்டங்கள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினார். **ராஜீவ் காந்தி ஆட்சிக்காலம் இந்திய–சோவித் நல்லுறவின் பொற்காலம்** ஆகும்.

## அண்டை நாடுகளுடன் உறவு

### இந்திய–சீன உறவு

பிரதமர் ராஜீவ் காந்தி தேக்க நிலையில் இருந்த இந்திய–சீன உறவைப் புதுப்பிக்க விரும்பினார். பொதுவாக அண்டை நாடுகளுடன் நட்புறவில் புதிய அணுகுமுறையைப் பின்பற்ற எண்ணிய அவர் சீனாவுடனான நட்புறவையும் கூட்டுறவையும் பலப்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். **எல்லைத் தகராறு** இந்திய–சீன நல்லுறவு உடலில் குத்திய முள்ளாக இருந்தது. எனினும் 1985 அக்டோபர் மாதம் ராஜீவ் காந்தி நியூயார்க்கில் சீனப் பிரதமர் **ஷோன் சியாங்** (Zhon Ziang)கைச் சந்தித்துப் பேசியது புது டெல்லியில் ஆறாவது சுற்று இந்திய–சீனப் பேச்சு வார்த்தைக்கு வழிகோலியது (1985 நவம்பர் 11). 1986 ஜூன் மாதம் சீனப் படையினர் மக்மகான் எல்லைக்குத் தெற்கே ஊடுருவல் செய்தனர். இருப்பினும் இரு நாடுகளுக்குமிடையே ஏழாவது சுற்றுப் பேச்சு வார்த்தை தடையின்றி நடைபெற்றது. (ஜூலை). இந்தியா சீனாவுடன் வர்த்தக உடன்பாடு செய்து கொண்டது (1987 மே 27). எட்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தை (நவம்பர்) இருநாட்டுத் தொடர்பில் விரும்பத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது.

1988 டிசம்பர் மாதம் பிரதமர் ராஜீவ் காந்தி சீனாவுக்குப்பயணம் செய்தார். 1954 க்குப் பின்–34 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு–பாரதப் பிரதமர் சீனா சென்று சீன அதிபர் டெங்சியோபிங் (Deng Xloping)கையும், பிற உயர்மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். சீன அதிபர் குறிப்பிட்டதைப் போன்று ராஜீவ் காந்தியின் சீனச் செலவு இரு,

நாட்டு நல்லுறவில் **'ஒரு புதிய துவக்கத்தை'** ஏற்படுத்தியது எனலாம். இரு நாடுகளின் தலைவர்களும் நட்புறவுடன் எல்லைப் பிரச்னையை இருதரப்புப் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். அதன்படி **'கூட்டுச் செயல் குழு'** (a joint working group) அமைக்கப்பட்டது. தன்முனைப்போடு ராஜீவ் காந்தி சீனா சென்றமைக்காக எதிர்க் கட்சித் தலைவர்கள் குறை கூறினர். இருப்பினும் பிரதமர் ராஜீவ் காந்தியின் சீனப் பயணம் இந்திய–சீன உறவிலிருந்த தடைதகர்த்து புதுவழி கண்டு எல்லைப் பகுதிகளில் அமைதி நிலவ வழி வகுத்தது என்பதில் ஐயமில்லை.

**இந்திய–பாகிஸ்தான் உறவு**

பரஸ்பர சந்தேகமும், பயமும், பொறாமையும் இந்திய–பாகிஸ்தான் உறவு சீர்கெடக் காரணமாக இருந்தது. ராஜீவ் காந்தி பிரதமர் பொறுப்பேற்றவுடன் இரு நாடுகளுக்குமிடையே உறவு உடன்பாட்டுடன் வளர்வதற்கான சூழ்நிலையைப் படிப்படியாக உருவாக்க விரும்பினார். இருநாட்டுத் தொடர்பை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் முயற்சியை மேற்கொண்டார். **இந்திய–பாகிஸ்தான் கூட்டுக் கமிஷன்** மூன்று நாள் கூட்டம் புது டெல்லியில் நடைபெற்றது (1985 ஜூலை). அக்கூட்டத்தில் விவசாய வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி பற்றிய இருதரப்பு உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. இரு நாட்டுப் பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கான வர்த்தக உடன்பாடும் ஏற்பட்டது (1986).

பாகிஸ்தானின் போராயுதப் பெருக்கம் புதிய போர் துவங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்கியது (1987). ராஜீவ் காந்தியின் சமயோசித நடவடிக்கையால் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றையொன்று தாக்குவதில்லை, சினமூட்டும் செயல்களில் ஈடுபடுவதில்லை, எல்லைத் துருப்புகளைப் படிப்படியாகத்திரும்பப் பெறல் என்ற உடன்பாட்டுக்கு வந்தன (1987 பிப்ரவரி). எனினும் பாகிஸ்தானிய படையினர் **சியாசென் கிளேசியர்** (Siachen Glacier) இந்திய நிலைகளைத் தாக்கினர் (1987 செப்டம்பர்).

1988 டிசம்பர் மாதம் இஸ்லாமா பாத்தில் நடைபெற்ற **'சார்க்'** (SAARC) உச்ச மாநாட்டில் ராஜீவ் காந்தி பாகிஸ்தான் பிரதமர் **பெனாசிர் புட்டோவை** சந்தித்து இரு நாட்டு உறவுகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவது பற்றிப் பேசினார். அதன் விளைவாக **மூன்று முக்கிய உடன்பாடுகள்** செய்து கொள்ளப்பட்டன. இரு நாடுகளும் **சியாசென் பிரச்னை** (Siachen Issue) பற்றிப் பேசி உடன்பாடு கண்டன (1989 ஜுன்–ஜூலை). இது இந்திய–பாகிஸ்தான் உறவு சீர்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ராஜீவ் காந்தி 1989 ஜூலை 16 ஆம் தேதி மீண்டும் பாகிஸ்தான் சென்றபோது பிரதமர் பெனாசிர் புட்டோவுடன் பலதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தினார். எனினும் 1989 நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தோல்வி கண்டதால் இந்திய–பாகிஸ்தான் உறவில் பின்னடைவு ஏற்பட்டது.

**இந்தியா – பங்ளாதேஷ் உறவு**

1986 ஜூலை மாதம் பங்ளாதேஷ் அதிபர் தளபதி **எர்ஷாத்** புதுடெல்லி வந்து பிரதமர் ராஜீவ் காந்தியுடன் உச்சகட்டப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது 1) எல்லை தாண்டிய பயங்கரவாதத் தாக்குதலைத் தடுத்தல்; 2) நதிநீர்ப் பகிர்வுக்கு சுமூக தீர்வு காணல்; 3) இந்தியாவுக்குள் சட்டப்புறம்பாக நுழைந்த சக்மா பழங்குடியின(Chakma Tribals)ரைத் திரும்பப் பெறல்; 4) இரு நாடுகளுக்குமிடையே வங்காள விரிகுடாப் பகுதியில் கடலோர எல்லை பற்றிய தகராறுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணல்; 5) கூட்டுப் பொருளாதார ஆணையத்தைக் (Joint Economic Commission) கூட்டி இருநாட்டு வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்துதல் ஆகிய முக்கியப் பிரச்னைகள் பற்றி

விவாதிக்கப்பட்டது. இதன் விளைவாக பங்களாதேஷ் இந்தியாவிலிருந்து 18,000 சக்மாக் குடியேறிகளைத் திரும்பப்பெற சம்மதித்தது! பிரதமர் இந்திரா காந்தியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'சார்க்' அமைப்பு ராஜீவ் காந்தியின் ஆட்சிக் காலத்தில் நடைமுறைக்கு வந்தது. இக்கூட்டமைப்பின் இரண்டாவது உச்ச மாநாடு 1986 நவம்பர் 17 – 18 தேதிகளில் பிரதமர் இராஜீவ் காந்தியின் தலைமையில் நடைபெற்று முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

**இந்திய–இலங்கை உறவு**

**இனக்கலவரங்கள்**

ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் இந்திய வெளியுறவுக் கொள்கைக்குச் சவாலாக இருந்தது இலங்கை இனப்பிரச்னை ஆகும். 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயகே அரசாங்கம் சிங்கள மொழியை இலங்கையின் ஆட்சி மொழியாக்கியதிலிருந்து சிங்களவர்–இலங்கைத் தமிழர்களிடையே இனக்கலவரங்கள் தீவிரமடைந்தன. 1958,1977,1982 ஆம் ஆண்டுகளில் வெடித்த இனக்கலவரங்களில் பல்லாயிரக் கணக்கான இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டனர்; சொத்துக்கள் சூரையாடப்பட்டன; பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். தமிழ்த் தீவிரப் போராளிகள் தனித்தமிழ் ஈழமே இலங்கை இனப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களது கோரிக்கையைப் போராடிப் பெறத் தீர்மானித்தனர்.

**இருதரப்புப் பேச்சுவார்த்தை**

ஸ்ரீலங்காவின் இனப் பிரச்னைக்கு சமரசத் தீர்வு காணும் நோக்கத்துடன் ராஜீவ் காந்தி 1985 மார்ச் 4 ஆம் தேதி இந்திய வெளியுறவுச் செயலர் **ரொமேஷ் பந்தாரியைக்** கொழும்புக்கு அனுப்பி வைத்தார். பந்தாரி இலங்கை அதிபர் **ஜே.ஆர். ஜெயவர்த்தனே**யுடன் நடத்திய இரண்டு நாள் பேச்சுவார்த்தை இலங்கை இனப் பிரச்னைக்கு சுமூகத் தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனேயும் புதுடெல்லியில் உயர் மட்டப் பேச்சு வார்த்தை நடத்தினர் (1985 ஜுன் 2,3,). இலங்கை இனப் பிரச்னைக்கு அமைதியான அரசியல் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**உள்நாட்டுப் போர்**

டெல்லி உயர்மட்டப் பேச்சு வார்த்தைக்குப் பின் ஸ்ரீலங்கா அரசாங்கம் பிரதான தமிழர் கட்சிகளுடன் (LTTE, EPRLF, TULF, EROS, PLOT) நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தியது. அதன் விளைவாக 1985 ஜுன் 18 ஆம் தேதி **ஸ்ரீலங்கா பிரகடனம்** வெளியிடப்பட்டது. இலங்கைப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான நம்பிக்கை ஏற்பட்டது. 1985 ஜீலை மாதம் இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்கிடையே **திம்புப் பேச்சு வார்த்தைகள்** (Thimbu Talks) நடைபெற்றன. ஆனால் திம்புப் பேச்சுவார்த்தைத் தோல்வி அடைந்தது. அதைத் தொடர்ந்து ஸ்ரீலங்காவில் **உள்நாட்டுப் போர்** (Civil War) துவங்கியது (1987). அப்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்; அவர்களது உடைமைகள் நாசமாயின. 1987 ஜூன் 4 ஆம் தேதி இந்திய விமானப்படையினர் ஜாப்னா தீபகற்பத்தின் மீது உணவுப் பொருள்களைப் போட்டனர். இந்தியாவின் அந்த அசாதாரணச் செயல் ஸ்ரீலங்காவில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்காது என்பதற்கான எச்சரிக்கையாவும் இருந்தது.

**இந்திய–இலங்கை உடன்படிக்கை, 1987**

இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு பலனளிக்காது என்பதை உணர்ந்த ஸ்ரீலங்கா அரசாங்கம் 1987 ஜூலை 29 ஆம் தேதி இந்தியாவுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன் சிறப்பு

**அம்சங்களாவன:** 1)ஸ்ரீலங்கா பல இனங்களையும் மொழிகளையும் கொண்ட பன்முகச் சமூகம். தனித் தன்மையுடைய பண்பாடுகளும், மொழிகளும், வாழ்க்கை நெறிகளும் கவனமாகப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்; 2) அடுத்தடுத்துள்ள தமிழ்ப் பகுதி மக்களிடையே **வாக்கெடுப்பு** (Referendum) நடத்தியபின் அப்பகுதிகளை ஒருங்கிணைத்தல்; 3) ஒன்று சேர்க்கப்படும் பகுதியில் மாநிலக் கவுன்சில்கள் (Provincial Councils) அமைக்கப்படும்; 4) ஜாப்னாவில் பிரகடனப்படுத்தப்பட்ட **அவசர நிலை 1984 ஆகஸ்டு 15 ஆம் நாளுக்குள் விலக்கிக் கொள்ளப்படும்;** 5) இரு நாடுகளும் சேர்ந்து இவ்வுடன்படிக்கையை செயல்படுத்தும் ; 6) உடன்படிக்கை கையெழுத்தான 24 மணி நேரத்துக்குள் இலங்கையில் பகைமைப்போர் நிறுத்தப்பட்டு; போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு; பாதுகாப்புப் படையினர் போர்வீரர் குடியிருப்புக்குத் திரும்பி விட வேண்டும். ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்டுக் கொண்டால் இந்திய அரசாங்கம் இலங்கைக்கு இராணுவ உதவி செய்யும்.

**இந்திய அமைதி காக்கும் படை (Indian Peace Keeping Force), 1987**

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஸ்ரீலங்கா அதிபர் ஜெயவர்த்தனேயும் இந்திய–இலங்கை உடன்படிக்கைக்குக் காரணமாக இருந்தனர். ஆனால் இலங்கைப் பிரதமர் பிரேமதாசாவுக்கு அவ்வுடன்படிக்கையின் மீது நம்பிக்கையில்லை. அவரும் அவரது சகாக்களும் உடன்படிக்கையில் கையெழுத்திட கொழும்பு சென்ற ராஜீவ் காந்தியைப் புறக்கணித்தனர். அது மட்டுமல்ல. ஸ்ரீலங்கா கப்பல் படையினர் அளித்த வழியனுப்பு விழாவின் போது படையினரைப் பார்வையிட்ட ராஜீவ் காந்தி படைவீரர் ஒருவரால் தாக்கப்பட்டார். அந்த எதிர்ப்புகளையும் மீறி ஸ்ரீலங்கா அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க **இந்திய அமைதி காக்கும் படை** இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ்ப் போராளிகள் ஆயுத ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்பதில் குறியாக இருந்தது. **'ஆயுத ஒப்படைப்புச் சடங்கு'** முடிந்த பின் ஏற்பட்ட மோதல்களின் போது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இந்திய அமைதி காக்கும் படையினரின் துணையுடன் தமிழ்ப் போராளிகளைச் செயலிழக்கச் செய்வதில் முனைப்பாக இருந்தனர்.

இலங்கைப் பிரதமர் பிரேமதாசா இலங்கை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் 1989) இந்திய–இலங்கை உறவில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. இலங்கை–இந்திய உடன்படிக்கையையும், அதை அடுத்து இந்திய அமைதிப் படை இலங்கைக்கு வந்ததையும் விரும்பாத பிரேமதாசா **இந்தியப் படை விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்** என்றார். 1989 மே மாதம் பிரேமதாசா விடுதலைப் புலிகளுடன் (LTTE) நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தும் என்று அறிவித்தார். ஸ்ரீலங்கா அதிபர் பிரேமதாசாவும் விடுதலைப் புலிகளின் **தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனும்** இந்திய அமைதிப் படையை இலங்கையை விட்டு அனுப்புவதில் குறியாக இருந்தனர்.

இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் இந்திய அமைதி காக்கும் படையின் பங்கு பெரும் சர்ச்சைக்குள்ளாயிற்று. அரசியல்தீர்வு காண விரும்பிய ராஜீவ் காந்தி சூழ்நிலைச் சதியால் இராணுவத் தீர்வுக்கு இணங்கி விட்டாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. அதாவது ஜெயவர்த்தனே விரித்த வஞ்சக வலையில் ராஜீவ் காந்தி சிக்கி விட்டாரோ என்ற எண்ணம் பரவலாக எழுந்தது. ராஜீவ் காந்தி இந்திய அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பியது இமாலய ராஜதந்திரத்தவறு என்ற கருத்து மேலோங்கியது. எனவே, 1989 நவம்பர் மாதம் காங்கிரசுக்கு பதில் பதவிக்கு வந்த தேசிய முன்னணி அரசாங்கம் இந்திய அமைதி காக்கும் படை (IPKF) யை இலங்கையிலிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டது.

## 1.4. 'சார்க்'கில் இந்தியாவின் பங்கு (Role of India in SAARC)

### 'சார்க்' கின் தோற்றம்

ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் உருவான 'பிராந்தியக் கூட்டுறவுக்கான தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பு (South Asian Association for Regional cooperation) வரலாற்று முக்கியத்துவமுடைய வளர்ச்சியாகும். 1980 மே மாதம் 2 ஆம் தேதி பங்ளாதேஷ் முனைப்போடு எடுத்த முயற்சியே 'சார்க்' அமைப்பாக மலர்ந்தது. 1984 ஆம் ஆண்டில் புது டெல்லியில் கூடிய தெற்காசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் 'சார்க்' கருத்தைச் செயல் திட்டமாகத் தீட்டினர். 1985 டிசம்பர் மாதம் 'சார்க்' நாடுகளின் முதல் உச்ச மாநாடு பங்ளாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது. பங்ளாதேஷ் அதிபர் எர்ஷாத் அம்மாநாட்டின் தலைவராகப் பொறுப்பேற்றார். பிரதமர் ராஜீவ் காந்தி ஆர்வத்துடன் பங்கேற்றார்.

### புது டெல்லி 'சார்க்' உச்ச மாநாடு, 1986

1986 நவம்பர் 17,18 தேதிகளில் 'சார்க்' கின் இரண்டாவது உச்ச மாநாடு புது டெல்லியில் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன: 1) பெண்கள் வளர்ச்சி நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தல். 2) போதைப் பொருள் வர்த்தகத்துக்கு முடிவு கட்டல். 3) 'சார்க்' நடவடிக்கைகளை ஒலிபரப்புத் திட்டம், சுற்றுலா வளர்ச்சி, மாணவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் தேவையான வசதிகளைக் கொடுத்தல், இளைஞர்களின் இலட்சியத்துக்கு வடிகால் அமைத்தல் போன்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தல். 4) உறுப்பு நாடுகளின் பகுதிகளைப் பயங்கரவாதிகள் பயன்படுத்துவதைத் தடுத்தல். 5) அமைதி, கூட்டுறவு மற்றும் சர்வதேசச் சட்டங்களைப் பின்பற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்கல். 6) 'சார்க்' செயலகத்தைக் காட்மாண்டுவில் ஏற்படுத்தல்.

1987 ஜூன் மாதம் 16–17 தேதிகளில் 'சார்க்'கின் நிலைக் குழு புது டெல்லியில் கூடி பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான செயல் திட்டத்தைத் தயாரித்தது. 1987 ஜூன் 19 ஆம் தேதி தெற்காசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றிய ராஜீவ் காந்தி "சார்க் அமைப்பு நமது குறிப்பிட்ட தேவைகளையும், முன்னுரிமைகளையும், தனித் தன்மையையும் பிரதிபலிக்கிறது" என்று குறிப்பிட்டார். சார்க்கின் சாதனைகளை விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டியதின் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

### இஸ்லாமாபாத் உச்ச மாநாடு, 1988

1988 டிசம்பர் 29 ஆம் தேதி இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர்புட்டோவின் தலைமையில் நடைபெற்ற தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பின் நான்காவது உச்ச மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ராஜீவ் காந்தி எழுச்சியுறையாற்றினார். சார்க் நாடுகள் மேலும் முனைப்புடன் செயல்பட வேண்டும்; நிழல்களோடு விளையாடுவதில் பயனில்லை; வர்த்தக விரிவாக்கம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, வளர்ச்சித் திட்டங்களில் மக்கள் பங்கேற்பு போன்ற கருத்துக்களை வலியுறுத்தினார். சுருங்கக்கூறின், பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆட்சிக்காலத்தில் தெற்காசியப் பிராந்தியக் கூட்டமைப்பின் வளர்ச்சியில் இந்தியாவின் பங்கு ஆக்கப்பூர்வமானதாகவும், பெருமைக்குரியதாகவும் இருந்தது எனலாம்.

# 1.5 தேசிய முன்னணி அரசு
## (NATIONAL FRONT GOVERNMENT, 1989-1991)

### *1. விஸ்வநாத் பிரதாப் சிங் (1989 - 1990)*

*1989 டிசம்பர் முதல் 1990 நவம்பர் வரை இந்தியாவின் பிரதமராக இருந்த வி.பி. சிங்கின் முழுப்பெயர் விஸ்வநாத் பிரதாப்சிங். அவர் 1931, ஜுன் 25-ம் தேதி உத்திரபிரதேச மாநிலம் அலகாபாத்தில் பிறந்தார். ஐந்து வயதாக இருக்கும் போது மாண்டா என்ற அரசகுடும்பத்தால் தத்து எடுக்கப்பட்டார். இவர் டேராடூனில் உள்ள கர்னல் பிரௌன் பள்ளியில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி பயின்றார். பின்னர் பனாரசிலிருந்த உதய் பிரதாப் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அதன் பிறகு புனேயில் உள்ள கல்லூரியில் கணிதத்தில் பி.எஸ்.சி. பட்டம் பெற்றார்.*

*வி.பி.சிங். மாணவராக இருக்கும் போதே அரசியலில் ஈடுபட்டார். மகாத்மா காந்தி, நேரு ஆகியோர் மீது பற்று கொண்ட அவர், காங்கிரசில் சேர்ந்தார். இந்திரா காந்தியின் காலத்தில் 1969-ல் சோரன் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்றார். 1971-ல் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதன் இந்திரா அமைச்சரவையில் வர்த்தக இணை அமைச்சராகப் பதவியேற்றார். 1980-ல் இந்திராவின் தீவிர விசுவாசியான வி.பி.சிங் உத்திர பிரதேச முதலமைச்சரானார்.*

*1983-ல் உத்திரபிரதேசத்தில் கொள்ளைக்காரர்களின் அட்டூழியங்கள் அதிகரித்தன. இதில் வி.பி.சிங்கின் சகோதரரும் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து முதல் மந்திரி பதவியை ராஜினாமா செய்தார். இந்திராவின் மரணத்திற்குப் பிறகு ராஜீவ் காந்தியின் மந்திரி சபையில் நிதி மந்திரியானார். அப்போது பெரிய தொழிலதிபர்களின் வீடுகளிலும், தொழில் நிறுவனங்களிலும் சோதனை நடத்த உத்தரவிட்டார். பல பிரச்சனைகளில் வி.பி.சிங்குக்கும், ராஜீவ் காந்திக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இதனால் வி.பி.சிங்கிடமிருந்து நிதி இலாகா பறிக்கப்பட்டு ராணுவ இலாகா கொடுக்கப்பட்டது.*

பின்னர் ராஜீவ் காந்தியுடன் மோதல் முற்றவே காங்கிரஸ் கட்சியை விட்டு நீக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து ஜன்மோர்ச்சா என்ற கட்சியைத் தொடங்கினார். ராஜீவ் காந்தியைத் தொடர்புபடுத்திய போபர்ஸ் பீரங்கி ஊழலை மக்களிடம் எடுத்துக் கூறினார். காங்கிரசுக்கு எதிராக 7 கட்சிகளைக் கொண்ட தேசிய முன்னணியை அமைத்தார். 1989-ல் நடைபெற்ற தேர்தலில் தேசிய முன்னணி வெற்றி பெற்றது. வி.பி.சிங் பிரதமரானார்.

## வி.பி.சிங் பிரதமராக தேர்வு செய்யப்படுதல்

1989-நவம்பர் மாதம் நடைபெற்ற லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் தோற்றது. அதற்கு 197 இடங்கள் மட்டுமே கிடைத்தது. எனவே ஆட்சியமைக்கும் முயற்சியில் ஈடுபடாது என்று ராஜீவ் கூறிவிட்டார். தேசிய முன்னணி அரசை வெளியில் இருந்து ஆதரிப்போம் என இடதுசாரிக் கட்சி களும் பி.ஜே.பியும் அறிவித்தன. 146 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்ற தேசிய முன்னணி ஆட்சி அமைத்தது.

ஜனதா கட்சித் தலைவரான சந்திரசேகருக்கு வி.பி.சிங்கை கொஞ்சமும் பிடிக்காது. எனவே பிரதமர் பதவிக்குப் போட்டியிடப் போவதாக அறிவித்தார். தன்னைத் துணைப் பிரதமராக்க வேண்டும் என்று தேவிலால் வற்புறுத்தினார். பதவிப்போட்டி ஏற்பட்டது. டிசம்பர் - 1ல் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க தேசிய முன்னணி எம்.பிக்கள் கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்தில் வி.பி.சிங் பேசும் போது தேசிய முன்னணி அமைப்பதற்குப் பாடுபட்டவர் தேவிலால் தான். எனவே பிரதமர் பதவிக்கு அவரை சிபாரிசு செய்கிறேன் என்றார். உடனே சந்திரசேகர் எழுந்து வழி மொழிந்தார். தேவிலால் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. ஆனால் தேவிலால் எழுந்து எதிர்பாராத விதமாக தான் பிரதமர் பொறுப்பை ஏற்க விருப்பமில்லை என்றும், வி.பி. சிங்கை பிரதமராக முன் மொழிகிறேன் என்றார். உடனே அஜித் சிங் வழி மொழிந்தார். வி.பி.சிங் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால் ஆத்திரம் அடைந்த சந்திரசேகர் என் முதுகில் குத்திவிட்டார்கள் என்று கூறிவிட்டு வெளியேறி விட்டார்.

1989, டிச. 2-ம் தேதி வி.பி. சிங் பிரதமராகப் பதவியேற்றார். குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் பதவி பிரமாணம் செய்து வைத்தார். பதவி ஏற்பு விழாவை சந்திரசேகரும் அவரது ஆதரவாளர்களும் புறக்கணித்தனர். டிசம்பர் 30ல் பாராளுமன்றத்தில் தனது மெஜாரிட்டியை நிரூபித்தார் வி.பி.சிங்.

## வி.பி. சிங்கின் சாதனைகள்

### 1. பஞ்சாப் பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சி

வி.பி. சிங் ஆட்சிக்கு வந்து சில மாதங்கள் வரை பிரச்சனை ஏதும் இல்லை. இந்தியாவின் பல பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தார். சென்ற

இடமெல்லாம் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. வி.பி.சிங் பஞ்சாப் பிரச்சனைக்கு சுமூகத்தீர்வு காண விரும்பினார். அதன் துவக்கமாக 1989, டிசம்பர் 7-ல் தேவிலால், முப்தி முகமது சையது, ஐ.கே குஜ்ரால் ஆகியோர் புடைசூழ வி.பி.சிங் அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குச் சென்றார். தெருக்களில் திறந்த ஜீப் வண்டியில் சென்றார். காங்கிரசின் கொள்கைகளை மாற்ற வேண்டும் என்று கூட்டங்களில் பேசினார். இவரது பஞ்சாப் பயணம் சீக்கியர்களின் மன அழுத்தத்தைக் குறைக்க உதவியது. அதன் பின் பஞ்சாப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு ஒரு அமைச்சரவைக் கமிட்டி அமைக்கப்பட்டது. ஆனாலும் வி.பி.சிங் காலத்தில் பஞ்சாப் நிலையில் முன்னேற்றம் இல்லை.

## 2. காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்த முயற்சி

வி.பி.சிங் காலத்தில் காஷ்மீரில் நிலைமை மோசமடைந்தது. காஷ்மீர் விவகாரங்கள் கமிட்டியின் தலைவராக ஜார்ஜ் பெர்னாண்டஸ் நியமிக்கப் பட்டார். அருண் நேருவும், உள்துறை அமைச்சர் முப்தி முகமது சையதும் காஷ்மீர் விவகாரங்களில் தலையிட்டனர். அந்த சமயத்தில் முப்தி முகமது மகள் ரூபையா என்பவரை காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். ரூபையாவை விடுவிப்பதற்காக பயங்கரவாதிகளின் கோரிக்கையை ஏற்று சிறையிலிருந்த ஐந்து தீவிரவாதிகளை விடுதலை செய்தார் வி.பி.சிங். இதனை எதிர்கட்சிகள் கண்டித்தன.

அடுத்து வி.பி.சிங் யாரையும் கலந்து கொள்ளாமல் ஜக்மோகன் என்பவரை காஷ்மீர் ஆளுநராக நியமித்தார். ஜக்மோகன் அவசர நிலை நேரத்தின் போது டெல்லியில் லெப்டினன்ட் கவர்னராக இருந்து முஸ்லீம் களின் விரோதத்தைச் சம்பாதித்தவர். எனவே காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா, ஜக்மோகன் நியமனத்தை எதிர்த்து முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். உடனே ஜக்மோகன் காஷ்மீர் சட்டசபையைக் கலைத்தார். அதன் பிறகு ஆளுநரின் ஒரு சில அத்துமீறல் நடவடிக்கைகளால் காஷ்மீர் மக்கள் ஆத்திரமடைந்தனர். எனவே வி.பி.சிங், ஜக்மோகனை ஆளுநர் பொறுப்பிலிருந்து விடுவித்தார். ஆனால் அவரை யாரையும் கலந்து ஆலோசிக்காமல் ராஜ்யசபா எம்.பி. ஆக்கினார். வி.பி. சிங்கின் காஷ்மீர் கொள்கை அவரது கட்சிக்காரர்களாலேயே விமர்ச்சிக்கப்பட்டது.

## 3. தபால் மசோதாவைத் திரும்பப் பெறுதல்

ராஜீவ்காந்தி காலத்தில் இயற்றப்பட்டு குடியரசுத்தலைவர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட தபால் மசோதாவிற்கு அப்போதய குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமல் வைத்திருந்தார். இந்த மசோதா சந்தேகப்படும் படியான தபால்களைப் பிரித்துப் பார்க்கும் அதிகாரத்தை தபால் அதிகாரிகளுக்கு வழங்கியிருந்தது. இது தனிமனித உரிமையை பாதிப்பதாக இருந்தது. எனவே

1980, ஜனவரி 6-ல் அந்த தபால் மசோதாவை திருப்பி அனுப்பி விடுமாறு அப்போதைய குடியரசுத்தலைவர் வெங்கட்ராமனிடம் கேட்டுக் கொண்டார் வி.பி.சிங்.

### 4. அரசியலமைப்புத் திருத்தங்கள் :

வி.பி. சிங் காலத்தில் அரசியல் சட்டத்தில் பலதிருத்தங்கள் கொண்டு வந்ததின் காரணமாக மக்களுக்கு நன்மை கிடைத்தது. இந்திய அரசியலமைப்பில் வகுப்புவாரி இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கப் பட்டது. இட ஒதுக்கீடு 10 ஆண்டுகளுக்கு மட்டுமே (1950-1960) பின்பற்றப் படவேண்டும் என்று 334-ம் விதி கூறியது. அதன்படி ஒவ்வொரு பத்து ஆண்டும் இந்த இடஒதுக்கீடு புதுப்பிக்கப்பட்டு நீட்டிக்கப்பட்டது. அதன்படி 62-வது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு இடஒதுக்கீட்டுக் கொள்கை 2000-ம் வருடம் வரை நீட்டிக்கப்பட்டது.

### 5. போபால் விஷவாயு நிவாரணம் :

போபால் விஷவாயுவால் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட வர்களுக்கு நஷ்ட ஈடு கேட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடந்து வந்தது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை 1989, பிப். 16-ல் வழங்கியது. அதன்படி 815 கோடி ரூபாய் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்ட ஈடாக வழங்குமாறு கூறப்பட்டது. மேலும் இந்த நஷ்டஈட்டுத் தொகையை மருத்துவ வசதிக்காகவும் வீடுகள் கட்டவும் பயன்படுத்த வேண்டும் என்று கூறியது. அதன்படி தேசிய முன்னணி அரசு பதவியேற்ற பிறகு 1990, மார்ச்சில் உச்ச நீதி மன்றத்தின் துணையோடு நிவாரணம் வழங்கப்பட்டது.

### 6. காவிரி நதி நீர் கவுன்சில் அமைக்கப்படல்

கர்நாடகாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே காவிரி நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் சிக்கல் இருந்து வந்தது. எனவே இப்பிரச்சனைக்குச் சுமுகமான தீர்வு காண 1990, ஜூன் 20-ல் மாநிலங்களுக்கிடையே காவிரி நதிநீர் கவுன்சில் அமைக்கப்பட்டது.

### 7. தேசிய ஒருமைப்பாட்டுக்குழு கூட்டப்படுதல்

வி.பி.சிங் ஆட்சிக் காலத்தில் வகுப்பு வாதம், பிரிவனைவாதம் போன்ற வற்றிற்கு எதிராக பலநடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதிதாக உருவாக்கப் பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழு 1990 - ஏப்ரலில் கூடியது. அப்போது முக்கியத்துவம் வாய்ந்த 5 குறிக்கோள்கள் அடங்கிய தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் குறிக்கோள்கள் மக்கள் அன்றாடம் சந்திக்கும் சவால்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும், நாட்டின் ஒற்றுமை, மதசார்பின்மை, ஜனநாயகத்தன்மை போன்றவற்றை உறுதியுடனும்,

ஒற்றுமையுடனும் எதிர்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தது. மேலும் இந்தத் தீர்மானம் அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டின் ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் மதச்சார்பின்மையைப் பேணிக்காக்கும்படி கேட்டுக் கொண்டது.

## 8. தேசிய பாதுகாப்பு சபை அமைக்கப்படுதல்

அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் உள்ளது போல இந்தியாவிலும் தேசிய பாதுகாப்பு சபை என்ற அமைப்பு தேசிய முன்னணி அரசு காலத்தில் 1990, ஜன.13ல் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக பிரதம மந்திரியும் உறுப்பினர்களாக வெளிஉறவுத்துறை, பாதுகாப்புத்துறை, உள்துறை மற்றும் நிதித்துறை மந்திரிகளும் சில முதலமைச்சர்களும் இடம் பெறுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த அமைப்பின் செயல்பாட்டின் கீழ் நாட்டின் பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிஉறவுக் கொள்கை, பொருளாதார நெருக்கடிகள் போன்றவை இருக்கும். அரசு எடுக்கும் கொள்கை முடிவுகள், தேசியப் பாதுகாப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கும் இந்த அமைப்பு உதவி செய்யும். ஆனால் இந்த சபையில் எடுக்கப்படும் முடிவுகள் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு உட்பட்டது ஆகும்.

## 9. புதிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது

1990-ஏப்ரல் மாதம் புதிய கல்விக் கொள்கையை செயல்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த புதிய கல்விக் கொள்கையின் மூலம் பாடத்திட்டங்கள் எளிமையாக மாற்றப்படுத்தப்பட்டு பள்ளிக் குழந்தைகளின் சுமை குறைக்கப்பட்டது. தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் குறைந்த விலையில் புத்தகங்களை பள்ளிகளில் வெளியிட்டது.

## 10. பிறசாதனைகள்

a) அமெரிக்க அரசு 1990 பிப்ரவரியில் உலகளாவிய நிலையில் மனித உரிமை பற்றிய ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் தேசிய முன்னணி அரசு மனித உரிமைகள் விஷயத்தில் சிறப்பாக செயல்படுவதாக குறிப்பிட்டிருந்தது. அதில் பஞ்சாபில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காண ஏற்பட்டது. சீக்கியத்தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டது, அமைதியாக முறையில் தேர்தல் நடத்தப்பட்டது, போடோ கிளர்ச்சியாளர் களுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஆகியவை சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

b) 1990, ஜுன் 12-ல் இன்சாட் ID செயற்கைக் கோள் விண்வெளியில் ஏவப்பட்டது.

c) 1990, ஜுன் 26-ல் புதிய தொழில் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் கிராமியத் தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன.

d) 1990, ஆகஸ்ட் 23-ல் தேசிய மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டது.

e) வெளி உறவிலும் வி.பி. சிங் அரசு சில சாதனைகளைச் செய்தது.

1990, மார்ச் 2-ல் இந்தியா பூட்டானுடன் வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்தது. 1990, ஜுன் 10-ல் நேபாளத்துடன் ஒரு இருதரப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. 1990 - ஜூலை மாதம் வி.பி.சிங் மாலத்தீவு சென்றார். அப்போது மாலத்தீவு அதிபர் கயூம் தக்கநேரத்தில் இந்தியா செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தார். 1990 ஜூலையில் ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அந்த நாட்டுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்தார். ரஷ்ய அதிபர் கோர்ப் சேவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திய சீன வர்த்தக உறவுகள் மேம்படுத்தப்பட்டன. அமெரிக்கா சூப்பர் 301 என்ற வர்த்தகக் கட்டுப்பாட்டைத் தளர்த்தியது.

## வி.பி. சிங்கின் வீழ்ச்சி

1990-ம் ஆண்டின் பிற்பகுதியில் வி.பி.சிங் ஆட்சிக்கு பெரும் சோதனைகள் ஏற்பட்டன. முடிவில் அவரது ஆட்சி கவிழ்ந்தது.

### a) தேவிலால் டிஸ்மிஸ்

சந்திரசேகரைத் தவிர மற்ற எல்லோரும் தேவிலாலை வெறுத்தார்கள். தேவிலால் தான் வகித்த ஹரியான முதல்வர் பதவியை தன் மகன் ஓம் பிரகாஷ் சௌடாலாவிடம் ஒப்படைத்தார். சௌடாலா, மேஹம் என்ற தொகுதியில் போட்டியிட்டார். அங்கு வாக்காளர்கள் மிரட்டப்பட்டனர். தேர்தல் சாவடி களை குண்டர்கள் கைப்பற்றினார். தேர்தல் கமிஷன் தேர்தலை ரத்து செய்தது. எனவே முதல்வர் பதவியிலிருந்து சௌடாலா. இது தொடர்பாக வி.பி.சிங்குக்கும் தேவிலாலுக்கும் மோதல்கள் ஏற்பட்டன.

போபர்ஸ் பீரங்கிகளை வாங்கியதில் ஆரிப் முகமதுவும், அருண் நேருவும் ஊழல் செய்தார்கள் என்று குற்றம் சாட்டி 1970-ல் வி.பி.சிங் குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதம் ஒன்றை வெளியிட்டார் தேவிலால். அது ஒரு பொய்யான கடிதம் என்று கூறிய வி.பி.சிங் 1990, ஆகஸ்ட் 1-ல் தேவிலாலை டிஸ்மிஸ் செய்தார்.

இனி வி.பி.சிங்கை பதவியிலிருந்து விரட்டும் வரை ஓய மாட்டேன் என்று சபதம் செய்தார் தேவிலால். அவர் புதுடெல்லியில் 1990, செப். 9ல் மாபெரும் விவசாயிகள் பேரணி நடைபெறும் என்று அறிவித்தார். வி.பி.சிங் குக்கு தன் பலத்தைக் காட்டுவது நோக்கம். வி.பி.சிங் அதற்குப் பதிலாக 1990, ஆகஸ்ட் 7-ல் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசு முடிவு செய்திருப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்தார். சோதனை தொடர்ந்தது.

### b) மண்டல் எதிர்ப்பு போராட்டங்கள் :

பிற்படுத்தப்பட்டோரின் மேம்பாடு குறித்து ஆய்வு செய்ய 1978, டிசம்பர் 20ல் ஒரு கமிஷன் அமைக்கும் முடிவை ஜனதா கட்சியை சார்ந்த பிரதமர்

மொரார்ஜிதேசாய் பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதன்படி B.P. மண்டல் தலைமையிலான R.R. போலே, தேவன் மோகன்லால், L.R. நாயக், K.சுப்ரமணியன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது. S.S. கில் இதன் செயலாளராக இருந்தார். சுமார் 24 மாதங்கள் பணி செய்த இந்த ஆணையம் 1980 டிசம்பரில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்திராகாந்தி அதன் பரிந்துரைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

மண்டல் அறிக்கை மிக விரிவான அறிக்கையாகும். இந்த அறிக்கையில் 'அரசாங்கத்திலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் 27 சதவீத வேலைகள் பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்படவேண்டும்' என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இதன்படி பார்த்தால் SC / ST பிரிவினருக்கு ஏற்கனவே 22.5 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்ததால் மொத்த ஒதுக்கீடு அவர்களுக்கு 49.5 சதவீதமாக அதிகரித்தது. அடுத்த கட்டத்தில் கல்வி ஸ்தாபனங்களிலும் உயர் பதவிகளிலும் இந்த ஒதுக்கீடு பின்பற்றப்படவேண்டும்.

தேசிய முன்னணி தலைவர்களிடையே அரசியல் கருத்து வேறுபாடு களும் மோதல்களும் வெடித்த சூழ்நிலையில் ஏறத்தாழ 10 ஆண்டுகள் தூசி படிந்து கிடந்த இந்த அறிக்கையை அரசியல் காரணங்களுக்காக 1990, ஆகஸ்ட் 7-ல் அரசு நிறைவேற்ற முடிவு செய்திருப்பதாக பாராளுமன்றத்தில் அறிவித்தார் வி.பி. சிங்.

பிரதமருடைய அறிவிப்பு தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது. ஒதுக்கீடு செய்வதைக் கொள்கையளவில் ஆதரிப்பவர்கள் கூட இப்படி அவசரமாக ஆலோசிக்காமல் செய்திருக்க வேண்டாம் என்று கூறினார்கள். பிஜூபட்நாயக், ராமகிருஷ்ண ஹெக்டே, யஷ்வந்த் சின்கா, அருண் நேரு போன்றோர் அதிருப்தியடைந்தார்கள். தேவிலால் மற்றும் சந்திரசேகர் இந்த முடிவைக் கண்டனம் செய்தார்கள். பிரதமர் தங்களுடன் ஆலோசிக்க வில்லையென்று இடதுசாரிக் கட்சிகளும், பிஜேபியும் அமைதி இழந்தன.

இந்த முடிவு சமூகத்தைப் பிளவுபடுத்தக்கூடியது. பிற்பட்ட வகுப்பினரை தேர்வு செய்ய தவறான அளவுகோல் பயன்படுத்தப்பட்டது பற்றி விமர்சனம் செய்யப்பட்டது. இந்த மண்டல் கமிஷன் அறிக்கை சமூகத்தை பிளவுபடுத்து வதாக இருந்தது. சமூகநீதியின் பெயரால் சாதிச் சண்டையைத் தூண்டியது. சமூகத்தில் சாதி உணர்ச்சி இல்லாதிருந்தவர்களிடம் சாதி உணர்ச்சியை மறுபடியும் தூண்டியது.

தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு இடஒதுக்கீடு செய்து 40 ஆண்டுகளாகி விட்டது. புதிய பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்கின்ற பொழுது அது சமூக நீதிக்கு பயன்பட்டிருக்கிறதா என்று அறிவார்ந்த விவாதம் நடைபெற்றிருக்க வேண்டும். சமூக நீதியை நிறைவேற்ற இன்னும் பல வழிகள் உள்ளன. சாதிகள் பெயரால் சலுகைகள் தரும் போது சாதிப் பிரமுகர்கள் பலனடை

கிறார்கள். சாதிக் கொடுமைகளுக்கு உட்படுபவர்கள் பலனடையவில்லை. இடஒதுக்கீட்டை அமுலாக்குவதற்கு முன்பு மேற்கூறியவற்றை கவனமாக சிந்தித்திருக்கவேண்டும். மக்களை மனதளவில் தயாரித்திருக்க வேண்டும்.

வட இந்தியாவில் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் இந்தியாவில் அரசாங்கம் ஆண்டுதோறும் லட்சக்கணக்கானவர்களுக்கு வேலை தருகிறது. லஞ்சமில்லை. தரகர்கள் இல்லை. தேர்வுகள் நடைபெறுகின்றன. தகுதியுள்ளவர்களுக்கு வேலை கிடைக்கிறது. சுமார் பாதியளவு வேலைகள் திடீரென ஒதுக்கீடு செய்யப்பட்ட போது அது அநீதியான நடவடிக்கை என்று மாணவர்கள் போராடினார்கள். தாழ்த்தப் பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதை போல அல்ல இது. தேசிய இயக்கம் அதைப்பற்றி இடைவிடாமல் பேசி மக்களிடம் கருத்து ஒற்றுமையை உருவாக்கிவிட்டிருந்தது. ஆனால் வி.பி.சிங் அரசியல் உள்நோக்கத்துடனே மண்டல் அறிக்கையை அமுல்படுத்த முடிவு செய்துள்ளார் என்று மாணவர்கள் தெரிந்து கொண்டார்கள்.

மண்டல் எதிர்ப்பு போராட்டம் உத்திரபிரதேசம், பீகார், ராஜஸ்தான் குஜராத், அரியானா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வன்முறைப் போராட்டமாக மாறியது. பஸ்கள் எரிக்கப்பட்டன. அரசாங்க சொத்துக்கள் நாசமடைந்தன. போராட்டத்தை ஆசிரியர்கள், அலுவலர்கள், குடும்பத் தலைவர்கள் ஆதரித்தார்கள். டில்லி, கோரக்பூர், வாரணாசி மற்றும் சில இடங்களில் துப்பாக்கி சூடு நடைபெற்றது. பல இடங்களில் மாணவர்கள் தங்களை எரித்து தற்கொலை செய்து கொண்டார்கள். தீக்குளித்து இறந்த மாணவ மாணவியரின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டியது. கல்வி நிலையங்களில் சாதி அடையாளங்களுக்கு இடமில்லாத காலம் மறைந்து மாணவர்கள் சாதிகளைச் சொல்லித் திட்டிக் கொள்கின்ற பரிதாபம் அரங்கேறியது.

1990, அக்டோபர் 1ல் உச்சநீதிமன்றம் மண்டல் அறிக்கையை அமுலாக்குவதற்குத் தடைவிதித்த போது மண்டல் எதிர்ப்பு போராட்டம் முடிவடைந்தது. வி.பி. சிங்கின் ஆட்சியின் முடிவு ஆரம்பமானது.

### c) அத்வானியின் ரதயாத்திரை

இதற்கிடையில் அயோத்தியில் ராமர் கோவிலைக் கட்ட வேண்டும் என்று பாரதீய ஜனதா வற்புறுத்தி வந்தது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி பாரதீய ஜனதா தலைவர் அத்வானி ரதயாத்திரை தொடங்கினார். குஜராத் மாநிலம் சோம்னாத்திலிருந்து உத்திரபிரதேசத்திலுள்ள அயோத்திக்கு 10,000 கிலோமீட்டர் ரதயாத்திரையை 1990, செப். 25-ல் தொடங்கினார். அயோத்தி போய் சேர்ந்ததும் ராமர் பிறந்த இடத்தில் கோயில் கட்டும் பணி துவங்கும் என்று அறிவித்திருந்தார்.

யாத்திரை சென்ற வழிகளில் ஆதரவு மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ரதயாத்திரையைக் கைவிடும்படி வி.பி.சிங் கேட்டுக் கொண்டார். ஆனால் அத்வானி மறுத்துவிட்டார். அயோத்தியில் பிரச்சனைக்குரிய இடத்தை அரசே ஏற்க வகைசெய்யும் அவசரச் சட்டத்தை மத்திய அரசு பிறப்பித்தது. அதற்குப் பாரதீய ஜனதாவும், விசுவ இந்து பரிஷத்தும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவே அவசர சட்டம் வாபஸ் பெறப்பட்டது.

அத்வானியின் ரதயாத்திரை பீகார் மாநிலம் சமஸ்தீர் சென்ற போது அக். 23-ல் அத்வானி கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து கலவரங்கள் மூண்டன. 1990 அக். 30-ல் அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்போவதாக விசுவ இந்து பரிஷத் அறிவித்தால் கரசேவர்கள் திரண்டனர். சுமார் 3½ லட்சம் பேர் அயோத்திக்கு வெளியே கைது செய்யப்பட்டனர். மேலும் தொடர்ந்து பக்தர்கள் கூட்டம் வரவே கூட்டத்தைக் கலைக்க போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினார்கள். இதில் 11 பேர் பலியானார்கள். உத்திரபிரதேச மாநிலத்தில் லக்னோ, அலகாபாத், அலிகார், காசி, மீரட் உட்பட 12 நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வடமாநிலங்களில் நடத்த கலவரங்களில் சுமார் 52 பேர் கொல்லப்பட்டார்கள். குஜராத் மாநிலத்தில் தான் மிக அதிக பட்சமாக 24 பேர் உயிரிழந்தனர்.

## வி.பி.சிங். அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் :

அயோத்தி பிரச்சனையில் வி.பி.சிங் அரசின் கொள்கைக்கு பாரதீய ஜனதா கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. எனவே வி.பி. சிங் அரசுக்கு இதுவரை அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக அறிவித்தது. மேலும் வி.பி.சிங் அரசைக் கவிழ்ப்பதற்கு தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்த சந்திரசேகர் ஜனதா தளத்தை இரண்டாக உடைத்தார். வி.பி. சிங்கை எதிர்க்கும் 58 எம்.பிக்கள் ஆதரவு தனக்கு இருப்பதாக அறிவித்தார்.

இதன் விளைவாக பாராளுமன்றத்தில் நம்பிக்கை ஓட்டு கோர முடிவு செய்தார் வி.பி. சிங். நம்பிக்கை ஓட்டு பெறுவதற்காக பாராளுமன்றம் 1990 நவம்பர் 7-ம் தேதி கூடியது. முதலில் விவாதம், பின்னர் ஓட்டெடுப்பு நடந்தது. வி.பி. சிங்குக்கு ஆதரவாக 142 ஓட்டுகளும், எதிராக 346 ஓட்டுகளும் கிடைத்தது. பலப்பரீட்சையில் தோற்றதால் உடனே தனது ராஜினாமா கடிதத்தை குடியரசுத்தலைவருக்கு அனுப்பினார் வி.பி. சிங்.

வி.பி. சிங் தலைமை தாங்கிய இரண்டாவது காங்கிரஸ் அல்லாத அரசாங்கம் பதினொரு பரபரப்பான மாதங்களுக்குப் பிறகு (341 நாட்கள்) 1990, டிசம்பர் 7-ம் தேதி முடிவடைந்தது. பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஓட்டெடுப்பு நடந்து, அதில் ஆட்சி கவிழ்ந்தது இதுவே முதல் தடவையாகும்.

## 2. சந்திரசேகர் (1990 - 1991)

இந்தியாவின் 8-வது பிரதமர் சந்திரசேகர் உத்திரபிரதேசம் மாநிலம் பல்லியா மாவட்டம் இப்ராகிம்பேட் என்ற கிராமத்தில் 1927, ஜூலை 1-ம் தேதி பிறந்தார். இவர் தனது முதுகலைப் பட்டத்தை அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பெற்றார். இவர் தனது இளமைப் பருவத்திலேயே காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றினார். ஆனால் சிறிது சிறிதாக சோசலிஸ்ட் கொள்கை யால் கவரப்பட்டு பிரஜா சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். 1962-ம் வருடம் மாநிலங்கள் அவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965-ல் மறுபடியும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த சந்திரசேகர் காங்கிரஸ் பாராளுமன்றக் கட்சியின் பொதுச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரசிலுள்ள பழமைவாதிகளுக்கு எதிராக இளம் எம்.பி.க்களைத் திரட்டினார். அவர்கள் இளம் துருக்கியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர் இந்திராகாந்தியின் தீவிர விசுவாசியானார். அவரது முற்போக்குத் திட்டங் களுக்கு ஆதரவளித்தார். அப்போது நிதி மந்திரியாக இருந்த மொரார்ஜிதேசாயின் மகன் காந்திபாய் தேசாயின் ஊழல்களை அம்பலப் படுத்தினார். 1974-ல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆரம்பித்த ஊழல் எதிர்ப்பு இயக்கத்திற்கு ஆதரவளித்தார். 1975-ல் அவசர நிலை பிரகடனம் செய்யப் பட்ட போது சந்திரசேகரும் மற்ற தலைவர்களுடன் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

விடுதலையான பின்னர் ஜனதா கட்சியில் சேர்ந்தார். இவர் 1983, ஜனவரி 6 முதல் கன்னியாகுமரியிலிருந்து புதுடெல்லி வரை பாதயாத்திரை மேற்கொண்டார். அப்போது இந்திய மக்களிடையே பிரபலமான தலைவரானார். 1984, அக். 11ல் ஜனதா தளம் கட்சி அமைக்கப்பட்ட போது தனது ஜனதா கட்சியை அதனுடன் இணைத்தார். பின்னர் தேசிய முன்னணி அமைக்கப்பட்டு வி.பி. சிங் பிரதமர் ஆன போது, பெரிதும் அதிருப்தி யடைந்தார். அவருக்கு ஒத்துழைப்புத்தர மறுத்தார். மண்டல் எதிர்ப்பு போராட்டம், அயோத்தி பிரச்சனைகளால் வி.பி.சிங் ஆட்சி கவிழ்ந்த பிறகு காங்கிரஸ் ஆதரவுடன் 1990 நவம்பர் 10-ல் பிரதமராகப் பதவியேற்றார்.

### பிரதமர் சந்திரசேகர்

சந்திரசேகர் பிரதமராகவும், தேவிலால் துணைப்பிரதமராகவும் பதவியேற்றனர். புதிய மந்திரி சபை அமைப்பதில் காங்கிரஸ் ஆர்வம் காட்ட வில்லை. அதன் பின் 1999, நவம்பர் 16-ல் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றார். குழப்பம் நிறைந்த, திறமையற்றவர் களைக் கொண்ட அமைச்சரவையை அமைத்தார்.

## பிரதமர் சந்திரசேகரின் நடவடிக்கைகள்

சமகால இந்திய வரலாற்றில் சந்திரசேகரின் பதவிக்காலம் ஒரு அரசியல் அபத்தமாகும். எந்த சாதனையும் நிகழ்த்தப்படவில்லை. 117 நாட்கள் மட்டுமே பதவி வகித்த ஒரு பிரதமரிடம் எதிர்பார்த்தலும் எந்த பயனும் இல்லை.

a) சந்திரசேகரில் அரசு இந்திய ஜனநாயக மரபுகளைப் பற்றி கவலைப் படாமல் பல முடிவுகளை எடுத்தது. முதலாவது தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குதல், தொழில் கூட்டுகளை அனுமதித்தல் போன்றவற்றில் எந்த நடைமுறைகளையும் பின்பற்றாமல் அவசரமாக பல முடிவுகள் எடுக்கப் பட்டன. தாராளமயமாக்கல், அந்நிய செலாவணி, வெளிநாட்டு முதலீடு போன்றவற்றில் அரசாங்கத்தின் கொள்கை குழப்பம் 'மிக்கதாகவே காணப் பட்டது. இஷ்டத்திற்கு அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மனம் போன போக்கில் மாற்றம் செய்யப்பட்டனர். நிர்வாக நியமனங்களில் அரசியல் குறுக்கீடு அளவுக்கு அதிகமானதாகவே இருந்தது.

b. இதற்கிடையில் மாநில அரசுகளைக் கலைக்கும் ஜனநாயக விரோதச் செயல்களும் நடைபெற்றது. பாண்டிச்சேரியில் 1989-ல் அமைக்கப்பட்ட திமுக ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை பயன்படுத்தி 1990 நவம்பரில் அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. சட்டமன்றம் 6 மாத காலத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது. அடுத்து தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுறுவலால் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டதாகவும், திமுக அரசு விடுதலைப்புலிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்று கூறி 1991, ஜனவரி 30ல் திமுக அரசு கலைக்கப்பட்டு குடியரசுத்தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வாறு சந்திரசேகரின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயகப்படுகொலைகள் நடத்தப்பட்டன. நேர்மையைப் பற்றிக் கவலைப்படாமல் அதிகாரம் தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டது.

c. சந்திரசேகரின் ஆட்சிக்காலத்தில் வெளிஉறவிலும் எந்த முன்னேற்றம் ஏற்படவில்லை. 1991-ல் மாலத்தீவில் நடந்த சார்க் உச்சி மாநாட்டில் சந்திர சேகர் கலந்து கொண்டார். அப்போது அங்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். எந்த பலனும் இல்லை. அடுத்து 1991-ல் நடைபெற்ற வளைகுடாப்போரின் போது போரில் ஈடுபட்ட ஈராக்கை வன்மையாகக் கண்டித்தார். இப்போரில் ஈடுபட்ட அமெரிக்கப் போர் விமானங்கள் இந்தியா வழியாகப் பறப்பதற்கும், இந்தியாவில் எரிபொருள் நிரப்புவதற்கும் சந்திரசேகர் அனுமதித்தார். இது எதிர்க் கட்சிகளால் கண்டிக்கப்பட்டது.

# 1.6 நரசிம்மராவ் ஆட்சி
## (NARASIMHARAO, 1991-1996)

இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக நரசிம்மராவ் 1991, ஜூன் 21-ல் பொறுப்பேற்றார். முதலில் சிறுபான்மை ஆதரவோடு அமைக்கப்பட்ட அரசாங்கம் பிறகு பெரும்பான்மை பெற்றதுடன் ஐந்தாண்டு காலம் நீடித்தது. இவரது ஆட்சிக்காலத்தில் பஞ்சாபில் சகஜநிலை திரும்பியது. காஷ்மீர் மற்றும் அஸ்ஸாமில் நிலைமை அபிவிருத்தியடைந்தது. பொருளாதாரக் கொள்கையில் துணிச்சலான பல முடிவுகளை எடுத்தார். நரசிம்மராவ் செய்த சீர்திருத்தங்கள் வரலாற்று நோக்கில் மிகவும் முக்கியமானவை. இவரது காலத்தில் தான் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் நடந்தது. அதனை இவரால் தடுக்க முடியவில்லை. இவரது கடைசி இரண்டு ஆண்டுகளில் அரசாங்கம் வேகத்தை இழந்தது. அரசு ஊழல் குற்றச்சாட்டுகளில் சிக்கித் தவித்தது. எனினும் ஐந்தாண்டுகள் முழுமையாக ஆட்சி நடத்தினார்.

### வாழ்க்கைக் குறிப்பு

தென்னகத்திலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ஆவார். இவர் 1921, ஜூன் 28-ம் தேதி ஆந்திர மாநிலத்தில் உள்ள வாரங்கல் மாவட்டத்தில் லகனே பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். பள்ளிப்படிப்பை முடித்த நரசிம்மராவ், வாரங்கல் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்தார். பின்னர் புனே பர்கூசன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் சட்டக் கல்வியும் பயின்றார்.

கல்லூரியில் பயின்ற போதே அரசியலில் ஈடுபாடு கொண்டார். காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கு கொண்டார். இந்தியா சுதந்திரமடைந்த பிறகு கரீம்நகர் தொகுதியில் போட்டியிட்டு 1951-ல் மக்களவை உறுப்பினரானார். அதன் பின் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று பிரமானந்தரெட்டி அமைச்சரவையில் சேர்ந்தார். 1971-ல் பிரமானந்தரெட்டி ராஜினாமா செய்த போது ஆந்திர முதலமைச்சராகப் பதவியேற்றார்.

1980-ல் இந்திரா காந்தி அமைச்சரவையில் வெளிஉறவு அமைச்சராகப் பதவியேற்றார். ராஜீவ் காந்தி அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சரானார். சந்திரசேகர் ஆட்சி கவிழ்ந்த பிறகு 1991-ல் பொதுத்தேர்தல் நடந்தது. அதில் வெற்றி பெற்று இந்தியப் பிரதமராகப் பதவியேற்றார்.

## பிரதமராகப் பதவியேற்றல்

1991, ஜுன் மாதம் பத்தாவது பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் நடைபெற்றது. அப்போது நாடெங்கும் ராஜீவ்காந்தி தேர்தல் பிரச்சாரம் செய்து வந்தார். 1991, மே 20-ல் முதல் கட்ட ஒட்டுப்பதிவு முடிந்துவிட்ட நிலையில், ஸ்ரீபெரும்புதூரில் தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்த ராஜீவ்காந்தி விடுதலைப் புலிகளால் 1991, மே 21-ல் மனிதவெடிகுண்டு மூலம் படுகொலை செய்யப் பட்டார். இதனால் நாடெங்கும் காங்கிரசுக்கு சாதகமான அனுதாப அலை வீசியது. எனவே ஜுன் 15-ல் நடைபெற்ற இரண்டாம் கட்டத்தேர்தலில் காங்கிரசுக்கு அதிக இடங்கள் கிடைத்தன.

அப்படி இருந்தும் மொத்தம் உள்ள 544 இடங்களில் 232 இடங்களே காங்கிரசுக்குக் கிடைத்தது. பாரதீய ஜனதா 120 இடங்களும், ஜனதா தளத்துக்கு 59 இடங்களும் கிடைத்தன. என்றாலும் தனிப்பெரும் கட்சி என்ற முறையில் மந்திரிசபை அமைக்க காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவுக்கு குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் அழைப்பு விடுத்தார்.

நரசிம்மராவ் அந்த தேர்தலில் போட்டியிடவில்லையென்றாலும் ராஜீவ் காந்தியின் எதிர்பாராத மரணம் காரணமாக கட்சியிலும், ஆட்சியிலும் நீண்ட அனுபவம் உள்ள நரசிம்மராவை பிரதமர் பதவிக்கு காங்கிரஸ் எம்.பிக்கள் தேர்ந்தெடுத்தனர். 1971, ஜுன் 21-ல் பிரதமராக பதவியேற்றார். குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். சிறுபான்மை அரசாங்கத்துக்கு தலைமை வகித்த நரசிம்மராவ் 58 அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையை அமைத்துக் கொண்டார். சபாநாயகராக சிவராஜ் பட்டீல் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1991, ஜுலை 15ல் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று மெஜாரிட்டி பலம் இல்லாமல் போனாலும் ஐந்து ஆண்டுகள் முழுமையாக ஆட்சி செய்தார்.

நரசிம்மராவ் பொறுப்பேற்ற போது பாராளுமன்ற உறுப்பினராக இல்லை. எனவே 1991, நவம்பர் 17-ல் ஆந்திராவில் நந்தியால் தொகுதியில் பாராளுமன்றத்துக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட நரசிம்மராவ் 5 லட்சத்து 80 ஆயிரம் ஒட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## பிரதமர் நரசிம்மராவின் சாதனைகள்

## 1.7 புதிய பொருளாதாரக் கொள்கை

நரசிம்மராவ் பொறுப்பேற்ற போது இந்தியாவின் பொருளாதாரம் படு

பாதாளத்தில் இருந்தது. அதற்குக் காரணம் அந்நியச் செலாவணி அடிமட்டத்தில் இருந்தது. ஏற்றுமதி இறக்குமதி தேக்கநிலையை அடைந்தது. தொழில் வளர்ச்சி வீதம் குறைந்து காணப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகள் குறைந்து காணப்பட்டன. கடன் சுமை அதிகரித்தது. இத்தகைய சூழ்நிலையில் தான் டாக்டர் மன்மோகன் சிங் நிதி அமைச்சராகப் பொறுப் பேற்றார். அவருக்கு உதவியாக மான்டேக் சிங் அலுவாலியா செயல்பட்டார். இருவரும் சேர்ந்து பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். இதன் காரணமாக இந்திய பொருளாதார வரலாற்றில் பெரிய திருப்புமுனை ஏற்பட்டது.

இந்த புதிய பொருளாதாரக் கொள்கை பல்வேறு புதிய கொள்கை களையும் மாற்றங்களையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் இக்கொள்கை திறமையை மேம்படுத்துவது, தனியார் துறையில் போட்டியைக் குறைப்பது போன்றவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது. உற்பத்தி திறனை அதிகரித்து அதன் மூலம் போட்டிகளைச் சந்திக்கக்கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவதே புதிய பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

## புதிய பொருளாதாரக் கொள்கையின் இயல்புகள்

புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய பொருளாதார சீர்திருத்தம் (New Economic Reform) என்றும் அழைக்கப்படுகிறது. அதன் முக்கிய இயல்புகள் பின்வருமாறு:

### 1. தாராள மயமாக்குதல் (Liberalisation)

தாராளமயமாக்குதல் என்பது வாணிபம் மற்றும் தொழிற்சாலைகளை உலக அளவில் போட்டியிடும் அளவிற்கு வளர்ப்பதற்காக அவைகள் மீதுள்ள தேவையற்றத் தடைகளை நீக்கி விடுவிப்பதற்கும், தனியார் துறை உரிமம் பெறவேண்டும் என்ற அடிப்படையில் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப் பட்டிருந்தனர். இதனால் அவர்களின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப் பட்டது. ஆனால் புதிய பொருளாதார மாற்றக் கொள்கையின் மூலம் உரிமம் பெறுதல் மற்றும் பிறதடைகள் வெகுவாகத் தளர்த்தப்பட்டன.

### 2. தனியார் மயமாக்குதல் : (Privitasation)

புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் பொதுத் துறையில் பல்வேறு அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன. 1991 ஜூன் மாதத்திற்கு முன்பு வரையிலும், பொதுத்துறை நிறுவனங்களுக்கு அதிக முக்கியத்துவம் தரப் பட்டது. அநேக நிறுவனங்கள் பொதுத்துறைக்காக, ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஆனால் தாராளமயமாக்கல் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு தனியார் நிறுனங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. பொதுத் துறைக்காக 17 நிறுவனங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டன. இது 6 ஆக குறைக்கப்

பட்டது. இதன் விளைவாக இரும்பு மற்றும் எஃகு, எரிசக்தி, விமானத் துறையிலும் தனியார் நிறுவனங்கள் தொழில் துவங்க அனுமதி வழங்கப் பட்டது. மேலும் எட்டாவது திட்டகாலத்தில் தனியார் முதலீட்டின் பங்கை 55 சதவீதமாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. பொதுத்துறை பங்குகள் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

### 3. உலகமயமாக்குதல் (Globalisation)

ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரமும், உலகப் பொருளாதாரத்தோடு ஒருங்கிணைக்கப்பட்ட நிலை உலகமயமாக்குதல் என்றழைக்கப்படுகிறது. உற்பத்தி காரணிகளும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் எவ்வித தடையுமின்றி பரிமாற்றம் செய்யும் நிலையில் நாடுகளுக்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுகிறது. உலகமயமாக்குதல் நான்கு முக்கிய காரணி களை உள்ளடக்கியதாகும்.

1. வர்த்தக தடைகளை எளிமையாக்கி, பொருட்கள் நாடுகளிடையே பரிமாற்றம் செய்வதற்கு அனுமதித்தல்.
2. மூலதனம் நாடுகளிடையே தடையின்றி செல்ல அனுமதித்தல்.
3. தொழில் நுட்பங்களை அனைத்து நாடுகளுக்குமிடையே பரிமாற்றம் செய்ய அனுமதித்தல்.
4. தொழிலாளர்களின் இடப்பெயர்ச்சியை அனுமதித்தல்

புதிய பொருளாதாரக் கொள்கையில் கீழ்கண்ட அனுமதிகள் வழங்கப்பட்டன.

(a) **அயல்நாட்டு முதலீடுகள் :** புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகத்திற்கு முன்பு, அயல்நாட்டு முதலீட்டிற்கு அரசு முன் அனுமதி பெற வேண்டும். இக்கொள்கையின்படி, முக்கியத் தொழிற்சாலைகளில் 5, சதவீதம் நேரடி முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1996-ல் 74 சதவீதம் வரைக்கும் அரசின் முன் அனுமதி பெறத் தேவையில்லை என அறிவிக்கப் பட்டது.

(b) **மாற்று மதிப்பு குறைப்பு** (Devaluation) : ஒரு நாட்டுப் பணத்தை, பிற நாடுகளின் பணத்தோடு குறைத்து மதிப்பீடு செய்வது, மாற்று மதிப்பு குறைப்பு எனப்படும். 1991-ல் இந்தியா இங்கிலாந்து நாட்டு பணமாகிய பவுண்ட் ஸ்டர்லிங்கோடு மாற்று மதிப்பு குறைப்பு செய்தது. இதனால் இங்கிலாந்து நாட்டு மக்களுக்கு, இந்தியப் பொருட்கள் மிக மலிவாக இருக்கும். அதே சமயம், இந்திய மக்களுக்கு இங்கிலாந்து நாட்டு பொருட் களின் விலை அதிகமாக இருக்கும். இதனால், இறக்குமதி மிகவும் குறையும்.

(c) **நீண்ட கால நிதிக் கொள்கை :** 1992 -97க்கான நீண்டகால நிதிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அயல்நாட்டுப்

பொருட்களோடு போட்டியிடும் தன்மை அதிகரிக்க ஊக்கம் தரப்பட்டது. புதிய தொழில் நுட்பங்களை புகுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

(d) **நிதி சம்பந்தமான சீர்திருத்தம் :** பொருளாதார நடவடிக்கைகளை சீராக வைத்திருப்பதற்கு நிதி சம்பந்தமான சீர்திருத்தம் இன்றியமையாத தாகும். நிதிப்பற்றாக்குறையை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. செல்லையா கமிட்டி பரிந்துரைகள் அடிப்படையில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. அநேகப் பொருட்கள் மீதான கலால் வரிகள் குறைக்கப்பட்டன.
2. வரிவிதிப்பின் அளவு 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.
3. பொதுச் செலவை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.
4. சுங்கவரி உயர்ந்தபட்சமான 250 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

நரசிம்மராவ் அரசாங்கத்தின் இந்த புதிய பொருளாதாரக் கொள்கையால் உடனடிப் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடிந்தது. மேலும் இது நீண்ட கால பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலியது.

## வரவு செலவுத்திட்டம்

மத்திய நிதி அமைச்சர் மன்மோகன்சிங் 1991-92-க்கான சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. காரணம் இந்த வரவு செலவு திட்டத்தில் உரமானியம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அத்துடன் ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கு நூறு கோடி ரூபாய் மானியம் கோரப்பட்டது. இரண்டையும் எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன. எனவே உரமானிய விலக்கல் நாற்பது சதவீதத்திலிருந்து முப்பது சதவீதமாகக் குறைத்து நிலைமையைச் சமாளித்தார் நிதி அமைச்சர். அடுத்து சர்ச்சைக்குள்ளான ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கான நூறுகோடி அரசு மானியத்தை சோனியா காந்தி ஏற்க மறுக்கவே அந்தப் பிரச்சனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

## காவிரி நடுவர் மன்றத்தீர்ப்பு

கர்நாடகத்திற்கும், தமிழ்நாட்டிற்குமிடையே காவிரி நதி நீர்ப்பங்கீடு தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது. இதனைத் தீர்ப்பதற்காக நீதிபதி சித்தோஷ் முகர்ஜியின் தலைமையில் காவிரி நதிநீர் பங்கீட்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அந்த மன்றம் 1991, ஜுன் 25-ல் தனது தீர்ப்பை வழங்கியது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் கர்நாடகம் 205 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டிற்குத் திறந்துவிடவேண்டும்.

ஆனால் இந்த தீர்ப்பை கர்நாடகம் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த தீர்ப்பை செயல்படுத்தவிடாமல் அதற்கு எதிராக ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. இப்பிரச்சனையால் இருமாநிலங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்தப் பிரச்சனையைத் தீர்க்கவேண்டிய கட்டாயம் நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. எனவே நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்குப் பதிலாக உச்சநீதிமன்றத்தில் ஆலோசனையைக் கேட்க முடிவு செய்தது மத்திய அரசு. பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் தனது ஆலோசனையை தீர்ப்பாக வெளியிட்டது. அதன்படி கர்நாடகம் பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது. நடுவர்மன்றத்தின் தீர்ப்பை அரசின் இதழில் மத்திய அரசு வெளியிட வேண்டும் என்றது. அதன்படி 1991, டிசம். 12-ம் தேதியிட்ட மத்திய அரசிதழில் நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பு பதிவு செய்யப்பட்டது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## 73-வது அரசியலமைப்புத் திருத்தம்

### நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில் பஞ்சாயத்து அமைப்பு

பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அரசியலமைப்புச் சட்டப் பாது காப்பளிக்கும் ராஜீவ்காந்தியின் துணிகரமான முயற்சியின் தொடர்ச்சியாக நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில் 73வது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் ராஜீவ் காந்தியின் கனவு நனவானது. இந்த 73-வது அரசியலமைப்பு திருத்தம் 1993, ஏப்ரல் 24-ல் நடைமுறைக்கு வந்தது. இந்திய பஞ்சாயத்து ராஜ் வரலாற்றில் இந்த நாள் முக்கியமான நாளாகக் கருதப்படுகிறது.

### 73-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் சிறப்பியல்புகள்

1) 20 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்று அடுக்கு பஞ்சாயத்து அமைப்புமுறை ஏற்படுத்தப் படல் வேண்டும். அவை கிராமப் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட பஞ்சாயத்து ஆகிய மூன்றடுக்கு ஆகும். இதன் உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

2) இந்த பஞ்சாயத்து அமைப்புகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டாயமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். பஞ்சாயத்து அமைப்பு ஏதேனும் காரணத்தால் கலைக்கப்பட்டால் ஆறுமாதத்திற்குள் கட்டாயமாக மறுதேர்தல் நடத்தப்பட வேண்டும்.

3) பஞ்சாயத்து தேர்தல்களை நடத்துவதற்கு சுதந்திரமான தேர்தல் கமிஷன் ஏற்படுத்தப்பட வேண்டும். மேலும் பஞ்சாயத்தில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்

படும். ஆதிதிராவிடர்களுக்கு 22 சதவீதமும், பிற்படுத்தப்பட்டோருக்கு 50 சதவீதமும், பகிரங்கப் போட்டிக்கு 28 சதவீதமும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

4) பஞ்சாயத்து அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களைப் பெருக்கவும், நிதி ஆதாரங்களைப் பரிசீலித்து பரிந்துரை கூறவும் மாநில அளவில் நிதிக் கமிஷன் ஒன்று அமைக்கப்படலாம். மாவட்ட அளவில் வளர்ச்சித் திட்ட வரைவுகளைத் தயார் செய்வதற்கு திட்டக்குழு ஒன்றும் அமைக்கப்படும்.

5) இந்த சட்டத்திருத்தம் நடைமுறைக்கு வந்த ஓராண்டு காலத்திற்குள் அதாவது 1944, ஏப்ரல் 23-க்கு மாநில சட்டமன்றங்கள் 73-வது சட்டத்திருத்தத் திற்கு ஏற்றபடி மாநில பஞ்சாயத்து சட்டங்களில் தக்க மாற்றங்களைச் செய்யவேண்டும். எனவே புதிய பஞ்சாயத்து ராஜ்ய சட்ட அமைப்பு இந்தியா முழுவதும் ஒன்றாகவே இருக்கும். இந்த 73-ம் அரசியலமைப்புத் திருத்தம் இந்தியாவுக்கு ஒரு பொதுவான பஞ்சாயத்து ராஜ்யக் கட்டமைப்பைக் கொண்டு வந்து பஞ்சாயத்து நிறுவனங்களுக்கு சட்ட பாதுகாப்பளித்தது. இது இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும். இது இந்தியக் கூட்டாட்சி பலப்படவும், ஜனநாயகம் வலுப்படவும் வழிவகுத்துள்ளது.

## இடஒதுக்கீடு பற்றிய பிரச்சனை

மண்டல் கமிஷன் அறிக்கை பற்றிய பிரச்சனை நரசிம்மராவ் காலத்திலும் தொடர்ந்தது. ஆனால் நரசிம்மராவ் இட ஒதுக்கீட்டுப் பிரச்சனையை தீர்க்க முயன்றார். அரசுப் பணிகளில் 27 சதவீத ஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்ட நரசிம்மராவ் பொருளாதார நிலையில் பின்தங்கியோருக்கு பத்து சதவீத ஒதுக்கீட்டை பரிந்துரைத்தார். ஆனால் இதனையும் சேர்த்து விசாரித்த உச்ச நீதிமன்றம் இது தொடர்பான தனது தீர்ப்பை வழங்கியது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு செய்யப் பட்ட 27 சதவீத ஒதுக்கீடு செல்லும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே சமூக கல்வி நிலைகளில் உயர்ந்துள்ள மக்கள் இடஒதுக்கீட்டுச் சலுகை களிலிருந்து ஒதுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட மக்களைப் பற்றிய உண்மை நிலையை அறிய மாநில அரசுகள் அதற்கென்று தனியான கமிஷன்களை அமைக்க வேண்டும். அரசுப் பணிகளில் பதவி உயர்வுகளில் இட ஒதுக்கீடு பின்பற்றக்கூடாது. பின்தங்கியோருக்கு பொருளாதார அடிப்படையில் கொடுக்கப்பட்ட பத்து சதவீத இடஒதுக்கீடு செல்லாது. இவ்வாறு தீர்ப்பளித்தது உச்சநீதிமன்றம்.

இந்த தீர்ப்புக்கு எதிராக மறுபடியும் வடமாநிலங்களில் கலவரம் வெடித்தது. மண்டல் கமிஷன் அறிக்கை வி.பி. சிங் அரசு ஏற்றுக் கொண்டது ஒரு இமாலயத் தவறு என்று சொல்லப்படுகிறது. எனவே தான் இட ஒதுக்கீட்டுப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணப்படாமலேயே உள்ளது.

## நரசிம்மராவின் வீழ்ச்சி

## 1.8 பாபர் மசூதி இடிப்பு

### a) பாபர் மசூதி வரலாறு

கி.பி. 1528-ல் அயோத்தியில் பாபர் மசூதி கட்டப்பட்டது. இதைக் கட்டியவர் பெயர் மிர் பாகி. இவர் பாபர் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாபர் மசூதி கட்டப்பட்ட இடம் ராமர் பிறந்த இடம் என்றும், அங்கு 11-ம் நூற்றாண்டில் ராமர் கோவில் கட்டப்பட்டது என்றும் அந்தக் கோவில் மீது பாபர் மசூதியைக் கட்டினார் என்றும் இந்துக்கள் குற்றம் சாட்டினர். 1853-ல் ராமர் பிறந்த இடம் தொடர்பாக இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

1857-ல் இந்து சாமியார் ஒருவர் பாபர் மசூதி வளாகத்தில் ஒரு சிறு பகுதியில் ராமர் கோவில் அமைத்தார். 1859-ல் இந்துக்களும், முஸ்லீம்களும் தனித்தனியே வழிபாடு நடத்துவதற்கு வசதியாக சுவர் ஒன்றை அரசாங்கம் கட்டியது. 1934-ல் நடந்த இந்து - முஸ்லீம் கலவரத்தில் பாபர் மசூதி சுவரும் ஒரு கோபுரமும் சேதம் அடைந்தன. 1983-ல் பாபர் மசூதி உள்ள இடத்தில் ராமர் கோவில் கட்டவேண்டும் என்ற இயக்கத்தை விஸ்வ இந்து பரிஷத் தொடங்கியது.

1986-ல் இந்துக்களும் சென்று வழிபடுவதற்கு வசதியாக பாபர் மசூதி கதவுகளைத் திறந்து விடும்படி பைஜாபாத் மாவட்ட நீதிபதி கட்டளையிட்டார். 1989-ல் பாபர் மசூதி அருகே ராமர் கோவில்கட்ட ராஜீவ் காந்தி அரசாங்கம் அனுமதியளித்தது. இதைத் தொடர்ந்து நடந்த கலவரத்தில் சுமார் 500 பேர் இறந்தனர்.

1990-ல் ராமர் கோவில் கட்ட ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் பாரதீய ஜனதா தலைவர் எல்.கே. அத்வானி ரத யாத்திரை தொடங்கினார். அயோத்தியில் ராமர் கோவில் கட்ட ஒரு லட்சம் தொண்டார்கள் (கர சேவகர்கள்) திரண்டனர். இவர்கள் பாபர் மசூதிக்குள் நுழைந்த போது கலவரம் மூண்டது. போலீசார் நடத்திய துப்பாக்கி சூட்டில் 30 பேர் கொல்லப்பட்டனர். 1992 டிச. 6-ல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நடந்த கலவரங்களில் 2 ஆயிரம் பேர் இறந்ததாக மதிப்பிடப் படுகிறது.

### b) பாபர் மசூதி இடிப்பு

1990 - செப்டம்பர் மாதம் ராமர் கோவில் கட்டுவதற்கு ஆதரவு திரட்டும் நோக்கத்துடன் அத்வானி ரதயாத்திரை மேற்கொண்டார். அப்போது பீகாரில் அவர் கைது செய்யப்பட்டார். அதனால் அயோத்தியில் ஏற்பட்ட கலவரத்தில் 30 பேர் கொல்லப்பட்டனர். இப்படிக் கொல்லப்பட்டவர்கள் அஸ்தியை

கரைப்பதாகக் கூறி நாட்டின் பல்வேறு பகுதிகளில் அஸ்திக்கலச யாத்திரைகள் நடைபெற்றன. இச்சமயத்தில் உத்திரப்பிரதேசத்தில் கல்யாண்சிங் தலைமையில் பாரதீய ஜனதா ஆட்சியில் இருந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட விஸ்வஇந்து பரிஷத் ராமர் கோவில் கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டது.

இதை அறிந்த நரசிம்மராவ் அரசு வழிபாட்டுத்தலங்கள் மசோதாவை அறிமுகப்படுத்தியது. அதன்படி 1947, ஆகஸ்ட் 15-ல் இருந்த வழிபாட்டுத் தலங்கள் மட்டும் அங்கீகரிக்கப்பட்டன. ஆனாலும் உத்திரப் பிரதேச அரசு பாபர் மசூதி அருகே உள்ள 2.77 ஏக்கர் நிலத்தை சுற்றுலா மையத்துக்கென கையகப்படுத்தியது. இதை எதிர்த்து அலகாபாத் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் இந்த 2.77 ஏக்கர் நிலத்தில் எவ்வித நிரந்தரக் கட்டிடத்தையும் எழுப்பக்கூடாது என்று தீர்ப்பளித்தது.

ஆனால் இந்த தீர்ப்பை மீறி கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் வழிபாட்டு மேடையை கட்டத்துவங்கினர். இதையும் உச்சநீதிமன்றம் தடை செய்தது. இந்தத் தடையையும் பொருட்படுத்தாமல் 1992, டிசம்பர் 6-ல் ராமர் கோவில் கட்டும் வேலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதற்காக விஸ்வ இந்து பரிஷத், பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த 2½ லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் கூட்டத்தின் ஒரு பகுதியினர் ஜெய் ஸ்ரீராம் என்று முழங்கிய படியே பாபர் மசூதி வளாகத்தை நோக்கி பாய்ந்தனர். தலைவர்கள் தடுத்தும் அதை மீறிச் சென்றார்கள். அவர்கள் கைகளில் சூத்தியல், இரும்புக் குழாய், மண்வெட்டி, தடிபோன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். மசூதி வளாக தடுப்பு வேலியை உடைத்து எறிந்து விட்டு பாபர் மசூதிக்குள் புகுந்தனர். அங்கு நின்ற போலீசாரால் தடுக்க முடியவில்லை.

பாபர் மசூதியில் உள்ள மூன்று கோபுரங்களில் காவிக்கொடி ஏற்றப் பட்டது. பின்னர் கோபுரத்தை இடிக்கத் தொடங்கினார்கள். பகல் 2.45க்கு முதல் கோபுரமும், மாலை 4.30க்கு இரண்டாவது கோபுரமும், 4.45க்கு மூன்றாவது கோபுரமும் இடிக்கப்பட்டன. இது பற்றி உள்துறை மந்திரி சவானுக்கு தகவல் கிடைத்ததும், கல்யாண் சிங்கை தொடர்பு கொண்டு பேசினார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் காட்டுத் தீ போல பரவியது. பதட்டமான சூழ்நிலை உருவாகியது. பல்வேறு இடங்களில் கலவரம் ஏற்பட்டது. டெல்லி, மும்பை, ஜெய்ப்பூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அன்று ஒரே நாளில் மட்டும் 233 பேர் பலியானார்கள்.

இந்நிலையில் பாபர் மசூதி ஒருங்கிணைப்புக் கமிட்டி தலைவர் சையத்சகாபுதீன் மற்றும் டெல்லி ஜும்மா மசூதி இமாம் ஆகியோர், பாபர் மசூதியைப் பாதுகாக்கத் தவறிய கல்யாண்சிங் அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று கோரினார்கள். நரசிம்மராவ் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் பற்றி மத்திய அரசு அவசர ஆலோசனை நடத்தியது. அதன் தொடர்ச்சியாக கல்யாண்சிங் தலைமையிலான பாரதீய ஜனதா மந்திரி சபை டிஸ்மிஸ் செய்யப்பட்டது. உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சி அமலுக்கு வந்தது. பாபர் மசூதி இடிப்பு, அதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்கள் ஆகியவற்றால் நரசிம்மராவ் ஆட்சி கவிழ்ந்து விடும் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால் இப்பிரச்சனைகளை எல்லாம் சமாளித்து ஆட்சியில் தொடர்ந்து நீடித்தார் நரசிம்மராவ்.

## பங்கு சந்தை ஊழல்

இந்தியாவில் பங்கு மார்க்கெட் வர்த்தகம் மும்பையை தலைமை இடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. அங்கு பங்கு மார்க்கெட்டில் பிரபல புரோக்கராக இருந்து வந்தவர் ஹர்ஷத் மேத்தா ஆவார். இவர், குறுக்கு வழியில் பெரும் பணக்காரர் ஆக ஒரு நூதன வழியைக் கையாண்டார். தினமும் ஏராளமான பங்குகளை வாங்கி பங்குகளின் விலையை செயற்கையாக உயரச் செய்தார். அவர் கையாண்ட யுக்தியால் இந்தியா முழுவதும் பங்குகளின் விலை தாறுமாறாக உயர்ந்தது. பங்குகளின் விலை உச்சத்தை எட்டியதும் தான் வாங்கி வைத்துள்ள பங்குகளை எல்லாம் விற்று ஏராளமாகச் சம்பாதிக்க வேண்டும் என்பது அவரது திட்டம்.

ஆனால் அவர் திட்டம் நிறைவேறுவதற்கு முன் மோசடி வெளிப்பட்டு விட்டது. வங்கிகளில் 3 ஆயிரம் கோடி மோசடி செய்து பங்கு மார்க்கெட்டில் விளையாடியுள்ளார் என்பது மத்திய அரசுக்குத் தெரிந்து விட்டது. எனவே சி.பி.ஐ. அதிகாரிகள் அவரது வீடு மற்றும் அலுவலகங்களை சோதனை செய்தனர். முக்கிய தஸ்தாவேஜுகள் சிக்கின. இதனைத் தொடர்ந்து சி.பி.ஐ. அதிகாரிகள் ஹர்ஷத் மேத்தாவைக் கைது செய்தனர். மேலும் இந்த மோசடியில் 50 வங்கி அதிகாரிகள் உட்பட 200 பேருக்குத் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. ஹர்ஷத் மேத்தா கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பங்குகளின் விலைகள் சரிந்தன. இதனால் பங்குகளை வாங்கி வைத்திருந்தவர்கள் பெரும் நஷ்டமடைந்தனர்.

மத்திய அரசு மீது ஹர்ஷத் மேத்தா கடும் ஆத்திரம் அடைந்தார். ஜாமீனில் வெளி வந்த அவர் பிரதமர் நரசிம்மராவுக்கு நான் 1 கோடி ரூபாய் கொடுத்தேன் என்று குற்றம் சாட்டி இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை உண்டாக்கினார். நிருபர்களை அழைத்து ஒரு பெரிய பெட்டியைக் காட்டி இந்த

கொள்ளப்பட்டன. இந்திய அமெரிக்க கூட்டு கமிஷன் அமைத்தல், வெளி உறவு அலுவலகத் தொடர்புகளை அதிகரித்தல், பாதுகாப்புக் கூட்டுறவை மேம்படுத்துதல், தொழில்நுட்ப உறவை மேம்படுத்துதல் ஆகியவை அந்த ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனாலும் சில பிரச்சனைகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது காப்புரிமை தொடர்பான விதிமுறைகள் பற்றியும், ரஷ்யாவிலிருந்து அதிநவீன ஏவுகணைகளை இந்தியா வாங்க முன் வந்ததும் இருநாடுகளுக்கிடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தின. ஆனாலும் இந்திய அமெரிக்க உறவு சுமூகமாகவே இருந்தது.

## c) *இந்திய ரஷ்ய உறவு*

*பிரதமர் நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில் இந்திய ரஷ்ய உறவு விரும்பத் தக்க முறையிலேயே இருந்தது. சோவியத் ரஷ்யக் குடியரசு உடைந்து சிதறிய சூழ்நிலையில், இந்திய ரஷ்ய உறவு ஒரு சூனியமான நிலையிலேயே இருந்தது. ஏற்கனவே வலிமையாக அமைக்கப்பட்டிருந்த இந்திய சோவியத் நட்புறவை தற்போது ரஷ்யாவுடன் புதுப்பித்துக்கொள்ள முயற்சி எடுத்தார் ராவ். அதன்படி 1994 ஜூன் மாதம் ரஷ்யப் பயணத்தை மேற்கொண்டார். ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக இருதரப்பு வர்த்தகம், தகவல் தொடர்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உட்பட ஆறு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பின்னர் 1994 டிசம்பரில் ரஷ்யப் பிரதமர் விக்டர் செர்னோமிர்டின் இந்தியா வந்த போதும் இருதரப்பு உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன.*

## d) *இந்திய சீன உறவு*

*இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே எல்லைப் பிரச்சனை, காஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு சீனாவின் உதவி, பாகிஸ்தானுக்கு சீனா அளித்து வரும் ராணுவ உதவி போன்ற பல பிரச்சனைகள் இருந்தாலும் இந்திய சீன உறவில் புதிய சிக்கல்கள் ஏதும் ஏற்படவில்லை. 1991, அக்டோபர் 21-ல் இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் கே.ஆர். நாராயணன் சீனாவுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார். அப்போது 38 ஆண்டுகளாகத் தடைப்பட்டுக் கிடந்த இந்திய சீன வங்கித் தொடர்பு புதுப்பிக்கப்பட்டது. 1991, டிசம்பர் மாதம் சீனப் பிரதமர் லீபெங் இந்தியாவில் ஆறுநாட்கள் நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார். அப்போது வர்த்தகம், தூதரக அலுவலகங்கள், விண்வெளி ஆய்வு தொடர்பாக மூன்று இருதரப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. பின்னர் 1994, ஜூன் 15-ல் இருநாடுகளும் நேரடி வர்த்தக கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. 1994, ஜூன் 18-ல் சீனத் துணைப்பிரதமர் குயன் குய்சென் இந்தியாவுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார்.*

## e) இந்திய பாகிஸ்தான் உறவு

நரசிம்மராவ் ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தானுடனான உறவு சீர்கெட்ட நிலையிலேயே காணப் பட்டது. இதற்கு முக்கிய காரணம் பாபர் மசூதி இடிக்கப்பட்டதேயாகும். இதனை கொண்டு அப்போது பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரிப் இந்திய விரோதப் போக்கை மேற்கொண்டார். 1992 டிசம்பரில் பாகிஸ்தான் தொலைக்காட்சியில், இந்தியாவில் முஸ்லீம்களுக்கு கொடுமைகள் இழைக்கப்படுவதாக கூறினார். இந்திய ஜனநாயகத்தைத் தாக்கி பேசினார். இந்தியாவை மதவெறி பிடித்த நாடு என்றும் கண்டித்தார். ஆனால் இந்தியா எப்போதும் போல் பிரச்சனைகளை சிம்லா ஒப்பந்தத்தின்படி இருதரப்பு பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்க்க முடியும் என்று கூறியது. பாகிஸ்தானின் தொடர்ச்சியான இந்திய விரோதப் போக்கினால் கோபமடைந்த இந்தியா 1994, டிசம்.26ல் கராச்சியில் இருந்த இந்திய தூதுவர் அலுவலகத்தை மூட முடிவு செய்தது.

## e) இந்திய ஜப்பானிய உறவு

நரசிம்மராவ் ஜப்பானுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டார். 1992 ஜூன் மாதம் நரசிம்மராவ் ஜப்பானுக்கு ஐந்து நாள் நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார். அப்போது இந்தியாவில் ஜப்பானின் முதலீட்டை அதிகரிக்கும்படி ஜப்பானிய அரசைக் கேட்டுக் கொண்டார். ஜப்பான் இந்தியாவுக்கு 850 மில்லியன் டாலர் கடன் உதவி செய்ய முன் வந்தது. நரசிம்மராவ் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பின் பற்றியதால் ஜப்பானிய தொழிலதிபர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய முன் வந்தனர். ஆனால் பாபர் மசூதி இடிப்பு பிரச்சனையால் தொழிலதிபர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய தயக்கம் காட்டினர்.

## f) இந்திய பங்களாதேஷ் உறவு

நரசிம்மராவ் ஆட்சிக்காலத்தில் பங்களாதேஷ் பிரதமராக இருந்தவர் பேகம் கலிதாஸியா ஆவார். இவர்கள் காலத்தில் இந்திய பங்களாதேஷ் உறவு பலப்படுத்தப்பட்டது. 1991 ஆகஸ்டில் பங்களாதேஷ் வெளிஉறவு அமைச்சர் [illegible]மான் இந்தியா வந்தார். பின்னர் 1992- மே மாதம் பிரதமர் கலிதாஸியா இந்தியாவுக்கு நல்லெண்ணப் பயணம் மேற்கொண்டார். அப்போது நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் விளைவாக முக்கிய உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. முக்கியமாக கங்கை நீரைப் பகிர்ந்து கொள்ளுதல், சக்மா அகதிகளைத் திரும்பப் பெறுதல், பங்களாதேசிலிருந்து சட்டப்புறம்பாக இந்தியாவுக்கு வருபவர்களைத் தடுத்தல், வர்த்தகம் மற்றும் தகவல் தொடர்பு மேம்பாடு ஆகியவற்றில் உடன்பாடு ஏற்பட்டது.

g) **இந்திய இலங்கை உறவு**

இந்திய இலங்கை உறவு இருநாடுகளுக்குமிடையே உள்ள மீனவர் பிரச்சனை, இந்திய வம்சாவளியினர் பிரச்சனை, வர்த்தக ஏற்றத்தாழ்வு போன்றவற்றால் சீரடையாமல் இருந்தது. கச்சத்தீவு பிரச்சனை தீர்க்கப்படாமலேயே இருந்தது. இந்தியாவிலுள்ள இலங்கை அகதிகள் பிரச்சனையும் தீர்க்கப்படாமல் இருந்தது. இதுபற்றி கவனிப்பதற்கு இரு நாடுகளையும் சேர்ந்த கூட்டுக் கமிஷன் அமைக்கப்பட்டது. 1992-ல் இலங்கை அதிபர் பிரேமதாச இந்தியா வந்த போது இருநாடுகளுக்கிடையேயான பொருளாதார தொடர்பை அதிகப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது. பாபர் மசூதி பிரச்சனையில் பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலையை இலங்கை எடுக்கவில்லை. 1993 ஜுன் மாதம் இந்தியா வந்த போதும், 1994-ல் புதிய அதிபராகப் பொறுப்பேற்ற சந்திரிகா குமாரதுங்கா வந்த போதும் இந்திய இலங்கை நட்புறவு பலப்படுத்தப்பட்டது.

h) **இந்திய நேபாள உறவு :**

நரசிம்மராவ் காலத்தில் இந்திய நேபாள உறவை வளர்ப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது. நேபாளப் பிரதமர் கொய்ராலா 1991-டிசம்பரில் இந்தியா வந்த போது ஐந்து வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. 1992-அக்.ல் நரசிம்மராவ் நேபாளத்திற்கு 3 நாள் அரசு முறைப்பயணம் மேற்கொண்டார். இதன் மூலம் இருநாடுகளுக்கிடையே உறவு மேம்பட்டது.

**மதிப்பீடு**

சிறுபான்மை ஆதரவோடு அமைக்கப்பட்ட நரசிம்மராவ் அரசாங்கம் பிறகு பெரும்பான்மை பெற்றதுடன் ஐந்தாண்டு காலம் நீடித்தது. ராஜீவ் காந்திக்குப் பிறகு நாட்டை 21-ம் நூற்றாண்டுக்கு அழைத்துச் சென்றவர் ராவ். இவர் செய்த பொருளாதாரச் சீர்திருத்தங்களால் இந்தியா வலிமை பெற்றது. பாபர் மசூதி இடிப்பால் இவரது அரசு நிலைகுலைந்தாலும் வீழ்ச்சியடைந்து விடவில்லை. இவரது ஆட்சியின் பிற்பகுதியில் அரசு மீது பல ஊழல் குற்றச் சாட்டுகள் தலை தூக்கின. அதனால் அரசு மக்கள் ஆதரவை இழந்து வந்தது. நரசிம்மராவின் வெளிநாட்டுக் கொள்கை தெளிவானதாகவும் ஆக்கப் பூர்வமானதாகவும் இருந்தது.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு இன்சைடர் என்ற நூலை எழுதினார். இந்த நூல் இவர் எவ்வாறு அரசியல் படிக்கட்டுகளில் உயர்ந்தார் என்பதைத் தெரிவிக்கிறது. ராவ் பல்மொழி வல்லுநர். இவருக்கு 17 மொழிகளில் எழுதவும் படிக்கவும் தெரியும். ஞான பீட விருது பெற்ற வைபதிகெழு என்ற தெலுங்கு நாவலை இந்தியில் சாசர்பான் என்ற தலைப்பில் மொழிபெயர்த்தார். 2004 டிசம்பர் மாதம் தனது 83-ம் வயதில்